விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி 20 | சனிக்கிழமை | (04.06.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 167

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிகத் துரிதமாகப் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு
★ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
★ வங்கிக் கணக்கு அவசியமில்லை
★ நீடிக்கப்பட்ட சேவை நேரம் ★ 365 நாள் சேவை
★ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P : 021 - 2227310, 021 - 2227555, 021 - 2227560,
FAX : 021 - 2227310 E.mail: thirumurugan@eudoramail.com
46 ஆடியபாதம் வீதி (ப.நோ.கூ.ச முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்



வெறிச்சோடிய யாழ். நகரம்

## நேற்றைய ஹர்த்தாலினால் வடக்குக் கிழக்கு சோபையிழந்தது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை நகரப் பகுதியில் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய வகையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்று மாறு கோரி நேற்று வட கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் வடக்குக் கிழக்கு சோபையிழந்து காணப்பட்டது. யாழ். குடாநாட்டிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். குடாநாட்டில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்பட் டிருந்தன.

அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. நேற்றைய ஹர்த்தால் காரணமாக இயல்பு வாழ்க்கை தடைப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

வடமராட்சி பகுதியில் வீதிகளில் ரயர்கள் போட்டு கொளுத்தப்பட்டதோடு சில இடங்களில் மரங்கள் போட்டு வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டது. கைதடியிலும் மீசாலைச் சந்தியிலும் இருக்கும் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. குறிப்பிட்ட இடத்தில் உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பிற்கு இந்தியா ஆதரவு

## இந்திய-இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிப்பு

(புதுடில்லி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல இனமக்களுக்கும் நிவாரண மீள்கட்டமைப்பு உதவி களை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க; இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி உள்ளிட்டோரை சந்தித்த பின்னர் நேற்றுக் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளனர். அதிலேயே இவ் ஆதரவு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினர் சூட்டதில் தந்தையும் மகனும் படுகாயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் காரை தீவில் நேற்று முன்தினம் இரவு விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மோட்டார் சைக் கிளில் பயணம் செய்துகொண்டி ருந்த தந்தையும் மகனும் காய மடைந்து கல்முனை தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். அவ் வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களே இத் துப்பாக்கிப் பிர யோகத்தைச் செய்ததாக கூறப் படுகிறது.

இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பிலுவில் அரசியல்துறை அலுவலகம் நேற்று அதிரடிப்படையினரால் சோதனை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் தம்பிலு வில் என்னும் இடத்திலுள்ள விடு தலைப் புலிகளின் மாவட்ட அர சியல்துறை அலுவலகம் நேற்று மாலை 6.30 மணியளவில் விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப் புக்கும் தேடுதலுக்கும் உள்ளா னது.

இந்த அலுவலகத்தில் விசேட அதிரடிப்படையினர் தனியாகச் சென்று தேடுதல் நடத்த முற்பட்ட போதிலும் அதற்கு விடுதலைப் புலிகள் அனுமதியளிக்காததைத் தொடர்ந்து மாலையில் பொலி ஸாரையும் அழைத்துச் சென்று போர்நிறுத்தக் கண்காணிப்பாளர் கள் முன்னிலையில் இந்த தேடு தல் நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வான்படைக்கு இந்திய அரசு உதவுமாம்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் குறைந்தது இரு விமானங் கள் இருப்பதாக வெளியான தக வல்களை அடுத்து இலங்கையின் வான்பரப்பினை பாதுகாக்கும் வலைப்பின்னலுக்கு உதவ இந் தியா முன்வந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

தற்சமயம் இந்தியாவுக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியை ஜனாதிபதி சந்திரிகா. சந்தித்துப் பேச்சு

(டில்லி)

இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க இந்திய ஆளும் கட்சியின் தலைவர் சோனியா காந்தியை புதுடில்லியில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள் ளார்.

ஜனாதிபதிக்கும் சோனியா காந்திக்கும் இடையில் நடை பெற்ற இச் சந்திப்பில் இரு நாட்டு உறவுகள், சமாதான முயற்சி, பொதுக்கட்டமைப்பு, சேது சமுத் திரத் திட்டம் உட்பட பல விட யங்கள் குறித்து ஆராயப்பட்டன.

அதேவேளை இந்திய பெற் றோலியத்துறை அமைச்சரையும் ஜனாதிபதி சந்தித்து கலந்துரை யாடினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினரை வசப்படுத்த இந். இடதுசாரிகளுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பியை பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்க வைப்பதற்கு இந்திய இடதுசாரிக் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு இடதுசாரிக் கட்சி மூலம் இன்னொரு இடதுசாரிக் கட்சியை வசப்படுத்த முடியும் என்ற நோக்குடன் ஜனாதிபதி இம் முடிவினை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று நாடு திரும்பியதும் பொதுக் கட்டமைப்பு குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இந்தியாவின் ஒப்புதல் பெறுவதற்காக ஜனாதிபதி இந்தியா சென்றுள்ளார். அங்கு அரச தலைவர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாகவும், பொதுக்கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுவார். அவர்களின் ஒப்புதல் கிடைத்ததும் ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திடுவார் என ஜயந்த தனபால தெரிவித்தார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிசா ரைஸை இலங்கை வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வாஷிங்டனில் சந்தித்துப் பேசுவதை படத்தில் காணலாம்.

EXPOAIR
your friend in the skies...
யாழ்- கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 2349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email - jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசு தொடர்பில் வெளியிடப்பட்ட செய்தி ஒருதலைப்பட்சமானது

## ரெலிகிராப் நாளிதழுக்கு அமைச்சர் மங்கள கடிதம்

பிரிட்டிஷ நாளிதழான ரெலிகிராப் இலங்கை அரசாங்கம் தொடர்பில் வெளியிட்ட செய்தி ஒருதலைப்பட்சமானது என்று ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அந்நாளிதழின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கட்டுரையின் எழுத்தாளர் கையாண்ட பாணி முற்றிலும் இலங்கை நாட்டிற்கும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதகமான முறையில் அமைந்துள்ளது என்று அமைச்சர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற 48 மணித்தியாலங்களுக்குள் நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர அரசாங்கத்தினால் முடிந்துள்ளது.

பொறுப்புள்ள அரசாங்கம் ஒன்று வருங்காலத்தில் இத்தகைய அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கவேண்டிய கடமையைப் புரிந்துகொள்ளவில்லை.

மக்களின் வாழ்க்கையை பழைய நிலைக்குக் கொண்டுவர அரசாங்கம் எடுத்துள்ள ஒருங்கிணைந்த முயற்சிகளை நூற்றுக்கு அதிகமான பிரமுகர்களும், உலகத் தலைவர்களும் பாராட்டியுள்ளார்கள்

சுனாமி தாக்கம் காரணமாக எவர் ஒருவரேனும் தொற்றுநோய் காரணமாக இறந்துள்ளார் என்பதை எழுத்தாளரினால் சுட்டிக்காட்ட முடியவில்லை என்று அமைச்சர் ரெலிகிராப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-9)

# துன்னாலை ஆட்டுப்பட்டி கிராமத்தின் அபி. வேலை பூர்த்தியடையும் தறுவாயில்!

(யாழ்ப்பாணம்)

துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கிராம அபிவிருத்தி முன்னேற்ற வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கிராமத்தின் அபிவிருத்தி முன்னேற்ற வேலைத் திட்டங்கள் யாவும் இந்த மாத இறுதியில் முடிவடையவுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெராஜ் தெரிவித்துள்ளார்.

இக்கிராமத்தில் சிறுவீதிகளை அமைத்தல், நீர்வழங்கல், மின்சாரம் வழங்கல், மலசல கூடங்கள் அமைத்துக் கொடுத்தல், கடன் வழங்குதல், சிறுவர் முன்பள்ளிகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், பொதுமண்டபம் அமைத்தல் போன்ற கிராம அபிவிருத்தித் திட்டங்கள் நிக்கொட் நிறுவன நிதியுதவியும் 4.6 மில்லியன் செலவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், அத்துடன் பொது மணப்பந்தலொன்று அமைக்கப்பட்டு அக்கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இக்கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நிக்கொட் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது.

இவ் வேலைத் திட்டங்கள் யாவும் இம்மாத இறுதிக்குள் முடிவடையவுள்ளதால் இம்மாத இறுதிப் பகுதியில் இக் கிராமத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முடிககப்பட்டு அப்பகுதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. (ற-19)

## ஆசிய நாடுகளில் பரவும் பறவைக் காய்ச்சல்

ஆசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் தொற்றுநோய் காணப்படுவதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பளிப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையில் விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-09)

## மெய்வல்லுநர் விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் கொக்குவில் இந்து முன்பள்ளியில் மெய்வல்லுநர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

# விஜேந்திரர் தம்பி ரகு விரைவில் ஜாமீனில் விடுதலை

(சென்னை)

கொலை, கொள்ளை முயற்சி ஆகிய வழக்குகளில் கைதுசெய்யப்பட்ட காஞ்சி இளைய மடாதிபதி விஜேந்திரரின் சகோதரர் ரகு ஜாமீனில் விடுதலையாகயுள்ளார்.

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கு மந்தைவெளி ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கு ஆகியவற்றில் காஞ்சி ஜெயேந்திரர், விஜேந்திரர், மடத்தின் மேலாளர் சுந்தரேச அய்யர், விஜேந்திரரின் சகோதரர் ரகு ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டது. ஜெயேந்திரர், விஜேந்திரர் இருவருக்கும் சுப்பீரிம் கோட் மற்றும் சென்னை கைகோட் ஜாமீன் வழங்கியது.

சுந்தரேச அய்யர், ரகு ஆகியோர் உட்பட 11 பேர் மீது குண்டர் சட்டம் பிரயோகிக்கப்பட்டது. இதனால் மற்ற வழக்குகளில் ஜாமீன் கோரி இவர்கள் கைகோர்ட்டை அணுகவில்லை.

முதலில் குண்டர் தடுப்புப் காவலை எதிர்த்து கைகோர்ட்டில இவர்கள் மனுக்கள் தாக்கல் செய்தனர். மனுக்களை விசாரித்த சென்னை கைகோர்ட் குண்டர் தடுப்புக் காவலை ர்த்துசெய்து உத்தரவிட்டது.

மந்தைவெளி ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் சுந்தரேச அய்யருக்கு ஜாமீன கிடைத்தது. இதைத் தொடர்ந்து புதன் கிழமை சுந்தரேச அய்யர் சிறையை விட்டு வெளியே வந்தார். ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி சென்னை கூடுதல் செஷன்ஸ் கோட்டில் ரகு தாக்கல் செய்த மனுமீது நேற்று முன்தினம் நீதிபதி ரோசய்யா உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவில் கூறியிருப்பதாவது,

இந்த வழக்கில் கடந்த மார்ச் 3 ஆம் திகதி முதல் மனுதாரர் (ரகு) சிறையில் உள்ளார். மற்ற வழக்குகளில் மனுத்தாரருக்கு சென்னை கைகோர்ட் ஜாமீன் வழங்கியுள்ளது. வழக்கின் தகுதியை இந்தக் கட்டத்தில் ஆராயமுடியாது. 89 நாட்களுக்கும் மேலாக இந்த வழக்கில் மனுதாரர் சிறையில் இருப்பதையும் வழக்குக் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுவிட்டதையும் கருத்தில்கொண்டு மனுதாரருக்கு ஜாமீன் வழங்கப்படுகிறது.

சைதாபேட்டை, மாஜிஸ்திரேட் கோட்டில் ரூ.10 ஆயிரத்துக்கான பத்திரம் அதே தொகைக்கு இரு நபருக்கு ஜாமீன் செலுத்தி மனுதாரர் ஜாமீனில் வரலாம். கோவையில் தங்கியிருக்கவேண்டும். தினசரி காலை, மாலையில் கோவை நகரப் பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும். இவ்வாறு நீதிபதி ரோசய்யா தனது உத்தரவில் கூறியுள்ளார்.

அனைத்து வழக்குகளிலும் ரகுவிற்கு ஜாமீன் கிடைத்துவிட்டது. எனவே அவர் சிறையை விட்டு விரைவில் வெளியே வருவார். (ற)

# நேற்றைய ஹர்த்தாலின்போது யாழ். குடாநாடு......










# இனவெறிக்கும் கொலை அச்சுறுத்தல்களுக்கும் எதிராகக் கொழும்பில் நடைபெற்ற மாநாடு

(கொழும்பு)

இனவெறிக்கும் கொலை அச்சுறுத்தல்களுக்கும் எதிரான மாநாடு கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

ஊடகவியலாளர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மக்கள் நல அமைப்புகள், கலைஞர்கள் என



60க்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் இம் மாநாட்டில் பங்கேற்றனர்.

கொழும்பு நகர சபைக்கட்டடத்தில் உள்ள ஜெயவர்த்தன நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டின் தொடக்கத்தில் மறைந்த மாமனிதர் சிவராம் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியோர் அனைவரும் இனவெறியையும் கொலை அச்சுறுத்தல்களையும் வன்மையாகக் கண்டித்து தமது உரைகளை வழங்கினர்.

இன ஒற்றுமையை வலியுறுத்தும் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

திரைப்பட இயக்குநர் தர்மசிரி பண்டாரநாயக்க அங்கு தனதுரையில் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு கடிதம் வந்தது. வடக்கு-கிழக்கு மக்களுடன் நான் கலாசார உறவை உருவாக்கியதற்கான வெகுமதியாகவே இந்த கொலை அச்சுறுத்தலைக் கருதுகிறேன் எனத் தெரிவித்தார்.

இலங்கை மகா ஜனக் கட்சியின் பெண்கள் பிரிவின் தலைவி துளசி சில்வா கருத்துரைக்கையில்,

இலங்கைச் சமூகம் இத்தகைய படுகொலை நடவடிக்கைகளால் ஜெர்மனி பாதிக்கத் தயாராக இருக்கிறதா? இந்தப் படுகொலைகளால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் தெருந்தும்பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய நிகழ்வுகளுக்கு எதிராக நாம ஒன்றாக அணி திரளப் போகிறோமா? இல்லை இந்தக் சுட்டத்திற்குப் பின்அப்படியே கலைந்து போகப்போகிறோமா? என்று கேள்வி எழுப்பினார்.

சிங்கள இசையமைப்பாளர் ஜெயதிலக பண்டார சிவராம் தராக்கிக்கு அஞ்சலி செலுத்தும் பாடலைப் பாடினார். இப்பாடலை ராவய ஊடகவியலாளர் மஞ்சுளா விஜேவர்த்தன எழுதியிருந்தார்.

அண்மையில் உருவாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பு தனது குழு, வினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் இம்மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன், சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சீதா ரஞ்சனி,பேராசிரியர் எச்.சிரியானந்த, மேல்மாகாண மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் இராதா கிருஸ்ணன்,சுகாதாரத்துறை தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமன் ரதனபிரிய ஆகியோர் இம்



மாநாட்டில் உரை நிகழ்த்தினர். (ந-4)

## வீடுகள் நிர்மாணம்

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதிப் படுத்தலின் கீழ்70 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

இந்தவகையில், ஊரத்தியில் 23 வீடுகளும், செம்மனத்தியில் 16 வீடுகளும், பல்லசுட்டியில் 16 வீடுகளும்,முன்னோடையில் 15வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.(ந-49)

## இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பி.ப 5.00 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் மகாராணி எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் கொம்ஷல் வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் இசைஞான திலகம் ஆர்.இராதாகிருஷ்ணனின் வயலின் கச்சேரியும் சங்கீதவாணி நாகேஸ்வரி பிரமானந்தரின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ந-5)


## சிறுவிளம்பரம்

### மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன் அறை இல.09,
31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
(9567) இரவு 8.30 வரை

### ஆனந்தி திருமண சேவை

அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றும் 1975ல் பிறந்த புனர்பூச நட்சத்திரம், கிரகபாவம் 34¹/₂ உள்ள செவ்வாய் தோஷம் அற்ற ஆண்மகனுக்கு வெளிநாடுகளில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். கடிதமூலம் அல்லது நேரடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி "ஆனந்தி திருமண சேவை" இல.01, பழம்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (9589)


# இராசிபலன்

04.06.2005
(வைகாசி 21, சனிக்கிழமை)
திரயோதசி பின்னிரவு 2.40 மணிவரை
பரணி பின்னிரவு 3.15 மணிவரை
இராகுகாலம் - 8.52-10.22 மணிவரை
சுபநேரம்- 2.52-4.22மணிவரை
சனிப்பிரதோச விரதம்.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், காரியஅநுகூலம், நண்பர்கள் சந்திப்பு, கலந்துரையாடல் |
| இடபம் | சுபசெலவு, முயற்சி தாமதம், உறவினர் வெறுப்பு, ஆரோக்கியக் குறைவு, |
| மிதுனம் | கீர்த்தி, விருந்துபசாரம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் விருத்தி, |
| கடகம் | அதிகாரம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, புதியதகவல், |
| சிங்கம் | சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, வீண்பகை, காரிய தாமதம், |
| கன்னி | உறவினர் வெறுப்பு, உடல் நலக்குறைவு, தர்மம்,காரிய தாமதம், |
| துலாம் | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், தொழில் சிந்தை செல்வாக்கு. |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, வீண்பகை, காரிய தாமதம், அதிக செலவு. |
| தனுசு | சொத்துப்பிணக்கு, பண விரயம், முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | புதிய சிந்தனை, வீண்பயம், காரிய தாமதம், சுபசெலவு. |
| கும்பம் | உறவினர் வழி நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் நன்மை, போசன சுகம். |
| மீனம் | உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், அதிக செலவு, தொழில் சிந்தை. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வள்ளவன்

பிறப்பு, விவாகம், இறப்பு

## மூலப்பிரதி வழங்கல் கட்டணம் மாற்றம்

(கொழும்பு)

. பிறப்பு, இறப்பு, விவாகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பல்வேறு நடைமுறைகள் திருத்தப்படவுள்ளதாக பதிவாளர் நாயகம் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள பிறப்பு மற்றும் மரணப்பதிவு, சாதாரண திருமணப் பதிவு, மேல்நாட்டு விவாகப்பதிவு, விவாகரத்துப்பதிவு, முஸ்லிம் விவாகம்,விவாகரத்துப்பதிவு என பவற்றுக்கான நடைமுறைகளே திருத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தகவல்கள் அடங்கிய ஆவண மூலப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்காகப் பெறப்படும் முத்திரைக் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் தீர்மானித்துள்ளதாகப் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

தற்போதுள்ள கட்டளைச்சட்டம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது எனவும் பதிவாளர் நாயகம் தெரிவித்தார். (அ-9)

## உரிமத்தகடுகளை பெற்றுக்கொள்க!

(அம்பன்)

பருத்தித்துறைப் பிரதேசசபை 2005ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டிக்கான உரிமத்தகடுகளை வழங்கி வருகின்றது.

எனவே,அனைவரும் தத்தமது துவிச்சக்கரவண்டிகளுக்கு இவ்வாண்டுக்கான உரிமத்தகட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும் விரைவில் பொலிஸாரின் உதவியுடன் தகட்டினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ந-56)

## வருடாந்த மஹோற்சவம்

(மருதங்கேணி)

பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15நாட்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ந-35)

## அபி.திட்டங்கள் முன்னெடுப்பு

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் நியாப் விவசாயத் திட்டத்தின் கீழ் மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் பொது மண்டபம் அமைத்தல், பொதுக்கிணறு, விவசாய வீதிகள் அமைத்தல் மற்றும் விவசாய அபிவிருத்தித்திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொடாவில் தெற்கு, கரணவாய் வடக்கு,சமரபாகு ஆகிய இடங்களில் நியாப் திட்டத்தின் கீழ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ந-35)

# குடும்பப் பெண் குத்திக் கொலை

(ஏறாவூர்)

ஏறாவூர் முதலாம்குறிச் தைக்கா வீதியில் குடும்பப்பெண் ஒருவர் இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆறு பிள்ளைகளின் தாயான மீரா முகைதீன் செயிலத்தும்மா (வயது-40) என்ற பெண்மணியே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை காலை5.30 மணியளவில் நடைபெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்த பணம் மற்றும் நகைகள் உட்பட இதர பொருட்களைக் கொள்ளையடிக்கும் நோக்கில் இக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச் சம்பவம் இடம்பெற்ற சமயம் அவரது கணவர் வீட்டில் இருக்கவில்லை எனவும் தொழிலுக்காகச் சென்றுவிட்டதாகவும் தெரியவருகிறது.

இதனை அவதானித்தே மேற்படி கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்து இக்கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபட்டிருக்க வேண்டும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் குழந்தைக்குப் பால் கொடுத்தவாறு உறங்கிக் கொண்டிருந்த போதே கொள்ளையர்கள் பொல்லால் தாக்கியது மாத்திரமன்றி கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டு வீட்டில் இருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள் என்பவற்றினைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-9)

# வருடாந்த தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கல்லூரியின் வீர சங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ். அரசாங்க அதிபர் கே. கணேஷ்,பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர். ரோகான் இராஜசிங்கம் மற்றும் ஆர். பொன்னுமணி ஆகியோர் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்வார்கள்.

திருமதி பரமேஸ்வரி கணேஷ் பரிசில்களை வழங்குவார். (து)

# போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழு போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தொடர்பாக சகல நீதிவான்களுக்கும் விளக்கிக் கூறப்படவுள்ளது. கவனயீனமாக வாகனங்களைச் செலுத்துதல், பாரிய விபத்துக்களை ஏற்படுத்துதல் என்பன பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவிருக்கிறது.

இவ்வாறான சம்பவங்களில் குற்றவாளிகளாக இனங்காணப்படும் சாரதிகளின் அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்யவும் கடுமையான சிறைத்தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் சந்திர ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகன விபத்துக்களால் ஏற்படும் உயிர்ச்சேதங்களையும் பொருட் சேதங்களையும் குறைப்பதே இதன் நோக்கமாகும். (ந-5)


மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்

* மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
* சித்திரப் போட்டி
* புகைப்படப் போட்டி
* சிறுகதைப் போட்டி

பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்
விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.

## இன்று ஒரு தகவல்

# போரும் சமாதானமும்

இந்த உலகத்தில் எல்லோரும் அனேகமாக சமாதானத்தைப் பற்றித்தான் பேசுகின்றனர். ஆனால் அப்படிப் பேசிக் கொண்டே அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். மிகவும் வேடிக்கையான உலகம். "ஏன் இப்படிச் சண்டையிடுகிறீர்கள்?" என்று கேட்டால் "நாங்கள் சமாதானத்தைக் காப்பதற்காக சண்டையிட்டுக் கொள்கிறோம்" என்று அதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள். அதன் பின் அவர்களிடம் என்ன பேசுவது?

உலகில் மனித குணம் குறைந்து கொண்டுவருகிறதோ என்று யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரியவர் எழுதியிருந்த ஒரு கட்டுரை கண்ணில்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் முடிந்த சமயத்தில் அவர் ஒரு நாவலைப் படித்தாராம். அந்த நாவலை எழுதியவரின் பெயர் அவருக்கு நினைவில்லையாம். ஆனால் நாவலின் பெயர் நினைவில் உள்ளது. "ஏப் அன்ட் எஸென்ஸ்" அந்தக் கதை என்னவென்பதை சுருக்கமாக அவர் சொல்லியிருந்தார். அதைத் தான் இப்போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.

ஹொலிவூட்டில் இருக்கும் ஒரு சினிமா ஸ்ரூடியோவிற்கு எதிரே திரையுலக நபர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். காந்திமகான் அமரரான நாள் அது. அதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அந்தநேரம் ஸ்ரூடியோவிலிருந்து குப்பை ஏற்றிக்கொண்டு வந்த லொறி ஒன்று அவர்கள் முன்திரும்பியது. அப்படித் திரும்பிய வேகத்தில் குப்பைக் காகிதங்களின் நடுவிலிருந்து இரண்டு புத்தகங்கள் கீழேவிழுந்தன.

இவர்கள் எழுந்து ஓடிப்போய் அதை எடுத்துப் பார்க்கிறார்கள். வில்லியம் டாலிஸ் என்ற எழுத்தாளர் எழுதிய திரைக்கதை அது. சினிமா எடுப்பதற்கு அது சரியில்லை என்று முடிவுசெய்து குப்பைத் தொட்டியில் போட்டிருந்தார்கள். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் 'ஏப் அன்ட் எஸென்ஸ்' என்று அதற்குத் தலைப்புக் கொடுத்திருக்கிறார். அந்த எழுத்தாளர் டாலிஸ். இவர்கள் அதைப் படித்துப் பார்த்தனர். அந்தத் திரைக்கதை மிகவும் அருமையாக இருந்தது.

இவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கும் அந்த எழுத்தாளரை நேரில் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அந்தக் கையெழுத்துப் பிரதியில் அவரது விலாசம் இருந்தது. அதை வைத்து அவரைத் தேடிப் போனார்கள். அந்த எழுத்தாளர் பெரிய மேதையாகவும் உயர்ந்த நிலையிலும் இருப்பார் என்று நினைத்துப் போனார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு சிறிய வீடு. அதற்குப் பின்னால் உள்ள ஒரு ஸ்டோர் ரூம் தான் அந்தப் புத்தகத்தில் இருந்த விலாசம். வீட்டுக்காரரிடம் விசாரித்தார்கள். அந்த எழுத்தாளரைப் பற்றி அவர் ஏதோ மிகவும் வெறுப்பாகப் பதில் சொன்னாராம். அவ்வளவு எரிச்சல்.

அங்கேயிருந்த அவரது உறவுக்காரப் பெண்மணிதான் அந்த எழுத்தாளரைப் பற்றிய விபரங்களைச் சொன்னாராம். அந்த சிறிய அறையில் பசியும் பட்டினியுமாகக் கிடந்த டாலிஸின் நிலைமை,அவரது பழக்கவழககம், ஐரோப்பாவில் மேடை நடிகையாக இருந்த அவரது காதலி, அவளோடு வாழ்வதற்காகப் பணம் சம்பாதிப்பதற்கு டாலிஸ் அமெரிக்கா வந்தது, முயற்சிகள் வீணாகியது, கடைசியில் அந்த எழுத்தாளர் எங்கேயோ காணாமல் போனது என எல்லா விபரத்தையும் அவள் விபரமாகச் சொன்னாள்.

இதைக் கேட்டதும் இந்த சினிமா ஆசாமிகளுக்கு மனம் என்னமோ மாதிரி ஆகிவிட்டது. எங்கே போயிருப்பார் அந்த எழுத்தாளர்? சரி... அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என எண்ணி அவர் எழுதிய திரைக்கதையைப் படித்தார்கள். படிக்கப் படிக்க அது கண்முன்னே படம் மாதிரி தெரிகிறது. அவ்வளவு அழுர்வமாக எழுதியிருக்கிறார். இப்போது நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு அந்தக் காட்சியைப் பாருங்கள்.

குரங்குகள் கூத்தாடுகின்றன. யுத்த நினைவுகளை அது ஏற்படுத்துகிறது. நடுவில் ஜஸ்டின் பரிதாபமாக தவிர்த்துக் கொண்டு நிற்கிறார். குரங்குகள் சேர்ந்துகொண்டு அவரை அமர்த்திவிடுகிறது. எங்கும் இருட்டு,அமைதி. மூன்றாவது மகாயுத்தம் முடிந்த நிலவும் அமைதி அது. உலகம் முழுவதும் காலி. மனிதனே கிடையாது. ஒரே ஒரு சிறிய தீவு மட்டும் அப்படியே இருந்தது.

ஒரு தாவர சாஸ்திரி,ஒரு பெண்,இன்னும் இரண்டுபேர் ஒரு படகில் அங்கிருந்து புறப்பட்டு வருகின்றனர். புதிய உலகம் அவர்களை வரவேற்கிறது. அங்கே இருப்பவர்கள் விசித்திரமான மனிதர்கள். சாத்தானை தெய்வமாகக் கும்பிடுபவர்கள். அவர்களிடம் இவர்கள் மாட்டிக் கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடைசியில் ஒரு வழியாகத் தப்பித்து ஓடிவருகிறார்கள். ஒரு இடத்தில் இடிந்துபோன கட்டடங்கள். தெருவில் அனாதையாக நிற்கும் கார்கள் சிதறிக்கிடக்கும் மண்டை ஓடுகள் எல்லாம் அங்கே அலங்கோலமாகக் கிடந்தது.

எல்லாவற்றையும் இவர்கள் பார்த்தார்கள். உலகத்தை சாத்தான் ஜெயித்துவிடுகிறான். 6 விரல், 7 விரல் உள்ள மனிதர்களை உண்டாக்கினான். கடைசியில் அந்த தாவர சாஸ்திரியின் கார் பயங்கர மனிதர்களின் எல்லையைத் தாண்டிப் போகும் போது வீதியோரத்தில் ஒரு சமாதியைப் பார்த்தார்கள். அது யாருடையது என்று அருகில் போய்ப் பார்த்தால் அதுதான் அந்தத் திரைக்கதையை எழுதிய எழுத்தாளர் டாலிஸின் சமாதி.இவர்கள் அந்த சமாதி மீது இரண்டு பூக்களை உடைத்து அஞ்சலி செலுத்திவிட்டு செல்கின்றனர். திரை விழுகிறது. அந்தப் புஸ்தகமும் முடிகிறது.

இதுதான் இன்று நான் உங்களிடம் கூற நினைத்த விடயம். இந்தக் காலத்தில் நடப்பதை நினைத்துப் பார்த்தால் எதிர்காலத்தில் அந்தக் கதை உண்மையானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்த உயிர் அவஸ்தைப்படுவதை இப்போது மனிதன் ரசிக்க ஆரம்பித்து விட்டான் சார்.

ஒரு பஸ் விபத்து அதில் ஒருவன் கையை இழந்துவிட்டான். வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தான். அடுத்தவன் அவனுக்கு ஆறுதல் கூறுகிறான் எப்படித்தெரியுமா? "ஏன் இப்படி துள்ளுகிறாய்? அங்கே பார்.. தலையை இழந்தவுன் கூட அசையாமல் கிடக்கிறான். நீ கை போனதற்காக இப்படி துடிக்கிறாயே" என்றானாம். அந்தளவுக்கு ஆகிவிட்டது மனிதாபிமானம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# யாழ். வந்த அவுஸ்திரேலியக்குழு நிலைமைகளை விரிவாக ஆராய்வு




(யாழ்ப்பாணம்)



யாழ்.குடாநாட்டு நிலைமைகளை ஆராய்வதற்காக அவுஸ்திரேலிய உயர்மட்டக் குழுவொன்று நேற்று முன் தினம் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது.

சிவில் விமானம் மூலம் நேற்றுமுன்தினம் காலை அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்கள் கிறெச் பிறெஞ் மற்றும் உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் வில் நன்கிரிவிஸ் ஆகியோர் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களை யாழ். பாதுகாப்புத் தலைமையக அதிகாரி லெப்.கேணல் டி.சி.கெப்பெட்டிவலான வரவேற்று அழைத்துச் சென்றதைத் தொடர்ந்து யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தில் வைத்து யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனால் இவர்கள் வரவேற்கப்பட்டனர். பின்னர் யாழ்ப்பாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் பற்றியும் மிதிவெடிகளை அகற்றுவது சம்பந்தமாகவும் விரிவாகக் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்தனர். மேலும் புத்தூர்ப் பகுதியில் இராணு வத்தினரின் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாட்டைப் பார்வை யிட்டதுடன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யுனிசெப் அதிகாரிகள், யாழ்மறை மாவட்ட ஆண்டகை தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ற)

# சிறிலங்கா உளவுத்துறை சாதித்தது என்ன?

## "டெயிலி மிரர்" பத்திரிகை கேள்வி

(கொழும்பு)

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி தலைநகர் கொழும்பில் பட்டப்பகலில், நகரின் கேந்திர ஸ்தானத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்தமாக அரச புலனாய்வுத் துறையின் தகுதியைக் கேள்விக்குள்ளாகியிருப்பதாக டெயிலிமிரர் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின் கொழும்பில் இது போன்ற சம்பவம் முதல் முறையாக அல்ல பலமுறைகள் நடந்துள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளில் அரசு திறமையாகச் செயற்பட முடியாமல் போனால் அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் தலைநகரிலேயே இப்படி நடப்பதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? இன்ஸ்பெக்டர் தாப்று கொல்லப்பட்ட ஒரு சம்பவத்தைத் தவிர இதர கொலைச் சம்பவங்கள் எதிலும் கொலையாளிகள் கைதுசெய்யப்படவுமில்லை. அவர்கள் பயன்படுத்தியதான ஆயுதங்கள் கைப்பற்றப்படவுமில்லை.

நமது பாதுகாப்புக் குறித்தும் உளவுத்துறை குறித்தும் மன்னிக்க முடியாத அவமானகரமான உண்மைகளையே இவை வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு 20 ஆண்டுகால யுத்தத்தை நடத்தியிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்கக் கூட முடியாமல் இருக்கிறது. சிறப்பு வாகனங்கள், காவல்துறையின் அவசரப் பிரிவுகள், நவீன தகவல் தொடர்பு அமைப்புகள் என எல்லாம் இருந்தும் என்ன பயன்?

ஒரு புலனாய்வுத்துறைத் தலைவரின் நகர்வுகள் குறித்த தகவல்களை வெளியாட்களுக்கு அளித்தது யார்? எதிரிகளுக்குத் தகவல்கள் எவ்வாறு நேரடியாகச் சென்றடைகின்றன?" என அப்பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (து-4)

# தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தடைசெய்யப்பட்ட அமைப்பு அல்ல

## அமெரிக்கத் தூதரகம் விளக்கம்

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டனை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி சந்தித்தது தொடர்பான சர்ச்சைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மைக்கேல் பெர்மியோ அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டெட்டைத் தொடர்புகொண்டு புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி றெஜி கிளின்டனைச் சந்திப்பது குறித்து தெரிவித்தபோது,

கிளின்டனுடனான இச்சந்திப்பு குறித்து தங்களுக்கு எந்த சிக்கலும் இல்லை என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க தூதரகப் பேச்சாளர் பிலிப் ஏ ப்ரெய்ன் கிளின்டன் அமெரிக்காவின் பிரதிநிதி அல்ல என்றும் அவர் ஐ.நாவின் பிரதிநிதியாகவே இங்கு வருகை தந்தார் என்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடனான சந்திப்புக் குறித்து அமெரிக்கத் தூதரகம் எவ்வித யோசனைகளையும் அளிக்கவில்லை என்றும் கூறினார்.

பாதுகாப்பு மற்றும் ஊடகவியலாளர் மாநாடு குறித்தே ஐ.நா.பிரதிநிதிகளிடம் நாங்கள் பேசினோம். மற்றப்படி, கிளின்டன் யார் யாருடன் சந்திப்பு மேற்கொள்கிறார் என்பதை எல்லாம் ஐ.நா.அமைப்பினரே தீர்மானித்தனர்.

கிளினடன் ஒரு தனிநபராக ஐ.நாவுக்காகக் கடமையாற்றுகிறார். அவர் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். அவர் அமெரிக்காவின் பிரதிநிதியாக இங்கு வரவில்லை. அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பும் அல்ல. இருந்தபோதும் கிளின்டன் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப்பில் பாதுகாப்புக் குறைபாடுகள் இருந்தன. இதை ஐ.நாவும் ஒத்துக்கொண்டிருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-04)

## வடமராட்சி கிழக்குக் கடலில்

# தொழிலில் ஈடுபடும் வெளியூர் மீனவர்கள்

(மருதங்கேணி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குக் கடல் பிரதேசத்தில் வெளியூர் மீனவர்கள் இடம்பெயர்ந்து வந்து கடற்றொழில்களை ஆரம்பித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மக்களுக்குப் போதிய கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமையால் சிறிய தொழில்களையே செய்துவருகின்றனர்.

உடப்பு , நீர்கொழும்பு போன்ற இடங்களிலிருந்து மீனவர்கள் இப்பகுதிக்கு வந்து வாடிகளை அமைத்து கரைவலைத் தொழிலை ஆரம்பித்துள்ளனர்.

இதுதவிர இப்பகுதியில் தொழிலின்றி இருக்கும் மீனவர்களுக்கும் தொழில் கொடுத்து அவர்களையும் தொழிலில் ஈடுபட வைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதியில் ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியுமெனவும் இவை சந்தைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மீனவர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ற-35)

# சிறந்த விவசாயிகளை தெரிவுசெய்ய நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சிப் பிரதேசத்தில் சிறந்த விவசாயிகளை தெரிவு செய்வதற்கான நடவடிக்கையில் விவசாயத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

பருத்தித்துறை கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் ஆறு விதமான சிறந்த விவசாயி கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிறந்த நிலபாட்டாளர்,வதிவிட வேளாண்மை, உப உணவு பயிர்சசெய்கை, நெற்செய்கை, பெண் தலைமைத்துவ சிறந்த விவசாயி, சிறந்த நீர்முகாமைத்துவ விவசாயி என ஆறுவிதமான சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். (ற-35)

# சர்வதேசத்தின் சுனாமி நிவாரணத்தில் ஊழல்; ஒருபோதுமில்லையென மறுக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

சுனாமி மீள்கட்டுமானப் பணி



களுக்கான சர்வதேச உதவிகளில் ஊழல் நடைபெற்றுள்ளது என சர்வதேச நிறுவனங்களால் சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்துளளார்.

அமெரிக்கா, கட்லாண்டாவில் சி.என்.என் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிகையில்,

இலங்கையில் சுனாமி மீளகட்டுமானப பணிகள் எதுவும் நடைபெறவில்லையென்றும் அங்கே ஊழல் நிலவுவதாகவும் ஊடகங்கள் ஏன் செய்திகளை வெளியிடுகின்றன எனத் தனக்குத் தெரியாது.

இங்கு கிட்டத்தட்ட 120 நாடுகளின் தலைவர்கள் வந்து போகின்றனர். அவர்களில் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானும அடங்குவார்.

இவர்களில் அனைவருமே எமககும உளளூர்பத்திரிகைகளுக்கும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும் இலங்கையில் சுனாமிககுப் பின்னரான புனரமைப்புப் பணிகள் நன்றாக நடைபெறுவதாகவே தெரிவிககின்றனர்.

இருந்தும் தேசிய அனர்தத்திற்குப் பின்னர் ஊழல்கள் இடம் பெறுவதாக தெரிவிப்பது எங்கேயும வழக்கத்தில் இருந்துவருகிறது.

சில நிறுவனங்கள் தெரிவித்ததனபடி, இலங்கையில் சுங்க அதிகாரிகள் வரி அறவிடுவதால் அங்கு அனுப்பப்பட்ட பொருட்கள் அப்புறப்படுத்தப்படாமல் துறைமுகத்திலேயே தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றன.

இத்தகைய வரலாற்றிலேயே மிகப பெரியதொரு இயறகை அழிவிறகுப் பின் 5 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இவ்வருட முடிவிற்குள் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிடும் என அதிகாரிகள் கூறுகினறனர். அதுதான் உண்மை நிலைப்பாடு.

சுனாமியால் 77,561 வீடுகள் பகுதியாகவோ, முற்றாகவோ சேதமாகியுள்ளன. இவ்வீடுகளிலிருந்தோர் அனைவரும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், தேவாலயங்களில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, ஜப்பான் சென்றுள்ள இந்தோனேஷிய ஜனாதிபதி ஜுடோஜோனோ விரைவில் தெற்காசியப பிராந்தியத்தில் எச்சரிகைக் கருவியைப் பொருத்துவதாக உறுதியளித்துள்ளனர் என்றார்.

இதற்கு முன்னர் இந்தோனேஷிய ஜனாதிபதி ஜி.என்.என் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தோனேஷியாவில் 128 ஆயிரம பேர் இறந்துள்ளனர். நாம் இவறறிலிருந்து தகுந்த பாடம் கற்றுள்ளோம். எமது தேசிய இயற்கை அனர்த்த எச்சரிக்கை கருவி போதியதாக இல்லை. எனவே, எதிர்காலத்தில் இந்தியக் கடற்பரப்பில் சக்தி வாய்ந்ததொரு கருவியை நிறுவுவோம் என்றார்.

(ற-4,6)

## மின்தடை

(யாழ்ப்பாணம்)

சில திருத்த வேலைகள் மேற்கொளளப்பட உள்ளமையால் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியன்காடு, நல்லூர், அரியாலை உட்பட தென்மராட்சி ஊடாக மின் வழங்கப்படும் பகுதிகளிலேயே இம் மின்தடை ஏறபடும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## சிவகுமாரனின் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தியாகி பொன சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (ற-5)

## புலனாய்வுத் துறையின் பாதுகாப்பு கவலை தெரிவிக்கிறார் ரத்தினதேரர்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவின கட்டளையிடும் அதிகாரி முத்தலிப்பின் கொலைக்கு அரசாங்கமே பதில் கூறவேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரதின தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவிததார்.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு போதிய பாதுகாப்பை வழங்க அரசாங்கத்தினால் முடியாது போயுள்ளது. முத்தலிப கொலை தொடர்பாக அரசாங்கம காட்டிவரும் அசிரத்தை குறித்து பாரிய சிக்கல் எழுந்துள்ளது.

இதுகுறித்து புலனாய்வுப் பிரிவில் உள்ள ஏனையவர்கள் திகில் அடைந்துள்ளனர். குறைந்தபட்சம் புலனாய்வுப் பிரிவில் உள்ள முக்கிய அதிகாரிகளைப் பாதுகாப்பதற்காக எத்தனை குண்டு துளைக்காத வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. அரசாங்கம் இந்தக் கொலைகள் தொடர்பாக ஒரு முடிவினைக் காணவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-8)

## ஔடத தகவல் நிலையத்தை கூடிய விரைவில் நிறுவுக!

(கொழும்பு)

கூடிய விரைவில் ஔடத தகவல் நிலையத்தை நிறுவுமாறு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

மருத்துவப் பொருட்கள் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய மத்திய நிலையத்தைக் கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் நிறுவி ஒவ்வொரு மாவட்டத்திலும் கிளைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று அச் சங்கம் வலியுறுததியுள்ளது.

இத்தகைய கிளைகள் மூலம பொதுமக்கள், சுகாதார அதிகாரிகள் ஆகியோருக்கு மருந்துப் பொருட்கள் தொடர்பான பாரபட்சம் அற்ற உண்மையான தகவல்களை வழங்கவேண்டுமென யோசனை கூறப்பட்டுள்ளது.

இது மருந்துகளைக் கையாளும் கொள்கை விடயங்களில் தீர்மானங்களை எட்டுவதற்கு உதவியாக அமையும்.

மருந்துப் பொருட்களின் விலை, பக்க விளைவுகள், மாற்று வழிகள என்பன பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் அறிந்துகொள்ள இவ் வாறான நடைமுறை வழி வகுக்குமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-5)



இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியபோது...

## முத்தலிப்பின் கொலை தொடர்பாக மாத்தளையில் ஐவர் கைது

(மாத்தளை)

மாத்தளையில் நேற்றுமுன்தினம் இரவு நடாத்தப்பட்ட சுற்றிவளைப் பின்போது சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு மாத்தளை பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் சுட்டுக் கொல்லபபட்ட இராணுப் புலனாய்வுப் பிரிவு கட்டளையிடும் அதிகாரி லெப்ரினன் கேணல் முத்தலிப்பின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குழுவினர் வழங்கிய தகவல்களையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கையை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப படுகிறது. கைது செய்யப்பட்ட 5 போரிடம் தேசிய அடையாள அட்டை இருக்கவில்லையென்றும் இவர்களிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


(அ-8)

## ஆற்றுகை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் வட்டு - விக்ரோறியாக் கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருந்த யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீட நுண்கலைத்துறை நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் 'செவ்விளக்கு' நாடக ஆற்றுகை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளது. (அ)





மண்கும்பான் மற்றும் வேலணை செட்டிபுலம் அ.த.க. பாடசாலைகள இணைந்து நடாத்திய வருடாந்த மெய்வல்லுனா திறனாய்வுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜி.வி. இராதா கிருஷ்ணனை மண்கும்பான் விததியாலய அதிபர் க.குமரேஸ வரநாதன் மாலை அணிவித்து வரவேற்பதையும், செட்டிபுலம வித்தியாலய அதிபர் சின்னையா, எவ்.சேவியர் தலைமையுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

*படங்கள்:- அல்லைப்பிட்டி நிருபர்*

## பாதிக்கப்பட்ட பெண்களை திருப்பி அழைக்க் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புக்குச் சென்ற இலங்கை தூதுவராலயங்களில் அமைக்கப் பட்டுள்ள நலன்புரி நிலையங்களில தஞ்சம் அடைந்திருக்கும் 300 இலங்கை யுவதிகளை நாட்டுக்கு திருப்பி அழைக்க வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வேலைவாய்ப்புக்காகச் சென்ற யுவதிகளில் அந்தநத நாடுகளில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட யுவதிகள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்திருப்பதாகவும் அவர்களுக்கு அங்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதாகவும் தெரிவித்த அதிகாரியொருவர், அவர்கள் தொழில் புரிந்த இடங்களிலிருநது அவர்களை வெளியேற்றுவதற்கு அனுமதி கிடைக்கும் வரை அவர்களுக்காக வீசா பத்திரங்களைப் பெறுவதில் சிக்கல்கள் எழுந்திருப்பதினால் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதில தாமதம் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

எவவாறாயினும், நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் இலங்கை யுவதிகளை நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் பொருட்டு அந்தந்த நாட்டிலிருககும் இலங்கை தூதரக அதிகாரிகள் வீசா பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவ்வதிகாரி மேலும தெரிவித்தார். (அ-8)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம

(யாழ்ப்பாணம்)

இறையடி சேர்ந்த மண்டைதீவு சிவசிறி.ஸ்கந்தபாலசுப்பிரமணியக குருக்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நாவலர் கலாசார மணடபத்தில் நடைபெறவுளளது.(ற)

## இப்படியும் நடக்கிறது

(சிங்கப்பூா)

சிங்கப்பூர் குடியுரிமை பெறுவதறகாக வயதான பெண்ணை மணக்க முயன்ற இந்திய வாலிபருக்கு 10 மாதச் சிறைத்தண்டனை வழங்கபபட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்தவர் ராஜாங்கம் வீரபாண்டியன் (27). சிங்கப்பூரில் வேலை செய்வதற்கான உரிமை பெற்றிருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் சிங்கப்பூர் சென்ற ராஜாங்கம் அந்த நாட்டின் குரியுரிமை பெறுவதறகாக 40 வயதான பார்வதி என்ற பெண்ணை மணக்கமுயன்றார். இதற்காக அந்தப் பெண்ணுக்கு பல வழியில் பண உதவி செய்துள்ளார்.

பார்வதியை மணக்க அவர் திருமண அலுவலகத்தில பதிவு செய்தபோது அங்குள்ள அதிகாரிகள் சந்தேகமடைந்தனர். சிங்கப்பூர் குடியுரிமை பெறுவதற்காகவே, சிறுநீரகம் பழுதடைந்த மற்றும் ஆஸ்துமா நோயாளியான பார்வதியை அவர் மணக்கத் துணிந்துள்ளார் என்பது தெரியவந்தது.

இதையடுத்து ஐந்து பிரிவுகளின் கீழ் ராஜாங்கத்தின் மீது வழககுப் பதிவு செயயபபடட்து. [illegible] போது ராஜாங்கத்துக்கு 10 மா[illegible] சிறைத்தண்டனை வழங்கப்பட்[illegible] ளது.

(ற[illegible]

# டோர்னேடோ

வேகமாகச் சுழன்றபடி தரையிலிருக்கும் பொருட்களையெல்லாம் தூக்கிவீசும் சூறாவளிக் காற்றே 'டோர்னேடோ' என்று அழைக்கப்படுகிறது.

கடுமையான டோர்னேடோக்கள் மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் சுழற்காற்றை வீசும். அத்தகைய காற்றின் வீச்சின் சேதாரம் 100 கிலோ மீற்றர் வரை கூட நீண்டிருக்கும்.

## உருவாவது எப்படி?

தரைப்பகுதியிலிருக்கும் வெப்பக காற்று மேலே உயரச் செல்கையில் குளிர்ந்து அதிலுள்ள நீர்த்துகள்கள் வேகமாக மாறுகின்றன.



அவ்வாறு உருவாகும்போது அதிலிருந்து சக்தி வெப்பமாக வெளியிடப்படுகிறது. மிகப்பெரிய கருமேகங்கள் உருவாகும்போது வெளியிடப்படும சக்தி கீழிருக்கும் காற்றை அதிகப்படியாக வெப்பப்படுத்துவதால் அந்த வெப்பக்காற்று லேசாகி மேல்நோக்கி சுழன்றபடி இழுக்கப்படுகிறது.

ஆற்றில் சுழல் உண்டாகும்போது தண்ணீர் சுழன்றபடி அங்கு மிதக்கும் பொருள்களை உள்ளே இழுத்துச் செல்வதைப் போல டோர்னேடோ உருவாகும்போது காற்றில சுழல் உண்டாகி தரையிலிருக்கும். பொருள்களெல்லாம் மேலிருக்கும் மேகத்தை நோக்கி வேகமாக இழுக்கப்படுகிறது.

## உருவாவது எப்போது?

வெயில் காலங்களில் காற்றில் ஈரப்பதம் அதிகமிருக்கும் சமயத்தில் இடி மின்னலுடன் கூடிய பெரும் கருமேகங்கள் உருவாகின்றன. டோர்னேடோக்கள் உருவாவதற்கு இத்தகைய மேகங்களே காரணம். பெரும்பாலான டோர்னேடோக்கள் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஏற்படுகின்றன.

## டோர்னேடோ வகைகள்?

டோர்னேடோக்கள் அவை ஏற்படுத்தும் சேதத்திற்கேற்ப 6 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குட என்பது மிக லேசான பாதிப்புகளை ஏற்படுத்தும் (சமீபத்தில் சென்னையில் நிகழ்ந்ததைப் போன்றது).

கு5 வகை டோர்னேடோக்கள் பெருத்த சேதத்தை விளைவிக்கும். கான்கிரிட் வீடுகள் கூட தரைமட்டமாகும. கார்கள், பேருந்துகள் அனைத்தும் தூக்கி வீசப்படும்.

அமெரிக்காவில் வருடா வருடம சில குறிப்பிட்ட இடங்களில் டோர்னேடோக்கள் அடிக்கடி தாக்கும். சிலசமயம் அவை மலைகளைக் கூடத் தாண்டிசசென்று அழிவு ஏற்படுத்துவதுண்டு.

1987 இல் வீசிய ஒரு டோர்னேடோ 10,000 அடி உயரமிருந்த ஒரு மலையைக் கடந்து சென்று அங்கிருந்த காடுகள் முழுக்க அழித்துள்ளது.

டோர்னேடோக்கள் சில சமயம் கடலின் மேல் கூட உருவாவதுண்டு. அப்போது நீர்த்துகள்கள் சுழன்றபடி வான்நோக்கி இழுக்கப்படும்.

சிலசமயம் இரண்டு வெவ்வேறு டோானேடோக்கள் ஒன்றாக இணைந்து பேரழிவு ஏற்படுத்தும். பெரிய டோர்னேடோக்களாக உருவெடுக்கும். சில டோர்னேடோக்கள தரையை அவ்வப்போது தொட்டுச் சென்று தாவித் தாவி சென்றபடி சேதம் ஏற்படுத்தும்.

பேரழிவு ஏற்படுத்தும் டோர்னேடோக்கள் இதுவரை ஏற்பட்டதில்லை. எனினும் இயற்கை சீற்றங்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பது நல்லது.

ஏனென்றால் உலகில் எப்போது என்ன மாற்றங்கள நிகழும் என நாம் கணிக்க இயலாதே.

சுனாமி பற்றி முன்பே நாம் அறிந்து வைத்திருந்தால் ஓரளவுக்கு நாம் சேதங்களை கட்டுப்படுத்தியிருக்கலாமல்லவா?. □

# நா காப்பது நன்மை தரும்!

அன்றாட வாழ்வில் மக்கள் ஒருவரோடொருவர் பழகும்போதும தொழிற்துறைகளிலும், சபை சந்திகளிலும் பல்வேறிடங்களிலும் வாய்ப பேச்சினாற் பல்வேறு காரியங்களைச் சாதித்துக்கொள்வதும், இன்னும் பல்வேறு காரியங்கள் இடையூறு கடகு ஆளாவதும் காணவும் கேட்கவும், அறியவும் முடிகின்றது.

இதில் சிலபேர் சொல்வது பொய்யானாலும், அது மற்றவர் நம்பக்கூடிய முறையில் அமைந்து விடுவதும், சிலபேர் பேசுவது உண்மையானாலும் அதைக் கேட்பவர் நம்ப முடியாதவாறு இருப்பதும் அன்றாட அனுபவங்களாக உள்ளன.

இதற்குக் காரணம் எம்முடைய நாக்குத்தான். இறைவன் நாவின் அத்தியாவசியத்தைக் கருதியே அதில் எலும்பு இல்லாது படைத்தானோ? நாவினை உருட்டிப் புரட்டிப் பேசியும், நாவினை நம்பிக்கைக்கு உறுதுணையாக்கியும் எத்தனை பேர் எத்தனை எத்தனை காரியங்களைச் சாதித்து விடுகின்றனர்!

மேலும், இந்த நாவாலேதான் நாம் உணவின் ருசியையும் நன்கு உணரமுடிகின்றது. நாக்கினாலே உலகில் எவ்வளவோ காரியங்களை இலகுவில் சாதிக்கமுடிகின்றது.

நாவன்மை உடையவர்களை வாக்குவன்மை உடையவர்களாகச் சமூகம் போற்றுகின்றது. பெரும் பெரும் சட்டவல்லுனர்கள், அரசியல்வாதிகள் தம் நாவண்மையினலே பெரும் சாதனைகளையே படைத்து விடுகின்றார்கள். உண்மையைப் பொய்யெனவும், பொய்யை உண்மை எனவும் உறுதிபடக்கூறித் தம் பேச்சினை உலகோர் நம்பும்படியாகவும், ஏற்கும்படியாகவும் செய்கின்றனர்.

இதனையே நன்கறிந்த பெரியோர்கள்.

"பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய்போலுமே, மெய்போலுமே
மெய்யுடை ஒருவன் சொல்லமாட்டாமையினால்
பொய் போலுமே பொய் போலுமே"

என எடுத்துக் கூறியுள்ளனர்.

மேலும் மேடைப் பேச்சாளர்கள், சங்கீத வல்லுனர்கள், பாடகர்கள், பட்டிமன்றம் நடத்துவோர் போன்றோர் நாவண்மையரல் எவ்வளவு தூரம் தம் கருத்துக்களால் மக்களிடையே பெருமதிப்புக்களைப் பெறுகின்றனர்.

ஆனால் நாவன்மை படைத்தோரெல்லாரும் உண்மையானவர்கள என்று கூறுதல் அரிதேயாகும்.

மேடைகளிலே எல்லோரும் போற்றும் படியாகப் பல்வேறு லட்சியக் கருத்துக்களையும், உபதேசங்களையும் செய்பவர்கள் தமது சொந்த வாழ்வில் பெரும் பொய்யர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும், பேச்சுக்கும் செயலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாதவர்களாகவும் இருப்பதை நாம் காணலாம்.

மேடைப் பேச்சில் பெரிதாகவெல்லாம் பேசிவிட்டு, அதற்கு மாறாக நடப்பவரிடம் மனைவி கோபித்தவுடன், மனைவியைச் சமாதானப்படுத்துவதற்காக மேடை பேச்சாளர்

"ஊருக்குத்தானடி உபதேசம்
உனக்கல்லப் பெண்ணே உபதேசம்"

என மனைவியைச் சாந்தப் படுத்தியதாக நம் முன்னோர் கூறுவர்.

எனவே, இறைவன் படைப்பில் மக்களுக்குக் கிடைத்த நாக்கு பெருமைக்குரிய உயர்ந்த உறுப்பாகும்.

நாவில் இருந்து வெளிப்படும் வார்த்தைகள் இனியனவாக, நல்லனவாக, பிறரைப் புண்படுத்தாதனவாக இருக்கவேண்டும்.

வள்ளுவப் பெருந்தகையார் பின்வருமாறு,

"வாய்மை எனப்படுவது யாது எனின்
யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

எனவும்,

"பொய்மையும் வாய்மை இடத்த புரை
தீர்த்த
நன்மை பயக்குமெனின"

எனவும்

"எல்லா விளக்கும் விளக்கல்லச் சான்
றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

எனவும்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு"

எனவும் வரும் குறட்பாக்கள் மூலம் அழகாகவும், தெளிவாகவும் மக்கட்கு எடுத்துக் கூறியுள்ளார்.

கல்வியறிவு இல்லாதவர் கள் கூடத் தம் நாவண்மையினால் பல்வேறு காரியங்களையும், சாதித்து விடுகின்றனர். எமது நாவிலிருந்து வரும் வார்த்தைகள் இனியவனவாக, நல்லனவாக யாருக்கும் நனமை கொடுப்பனவாக இருத்தல் அவசியமாகும்.

இதனைப் பின்வரும் குறட்பா

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவந்தற்று"

எனத் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே வாழ்க்கையில் இனிய, நல்ல பயனுள்ள, பிறர்புண்படாத வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நமக்கும், பிறர்க்கும் நலம் காணுவோமாக. □

நீர்வைமணி


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
அரிமாக் கழகம் - கோப்பாய்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (வலி.கிழக்கு பிரிவு) இணையும்

## சான்றோர் கௌரவிப்பு



டாக்டர் லயன் வை. தியாகராசா

**தலைமை:** கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் பீடாதிபதி (யாழ்ப்பாணம் தே.க.கல்லூரி)

**காலம்:** ஞாயிற்றுக்கிழமை 05-06-2005 பி.ப. 4.30

**களம்:** யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரிக் கலையரங்கு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
கோப்பாய், யாழப்பாணம்.

நிகழ்ச்சி ஒழுங்கு:

பி.ப.4.30 - விழா நாயகர் மண்டபத்துக்கு அழைத்துவரல்
பி.ப.4.35 - மங்கள விளக்கேற்றல்
பி.ப.4.40 - பிரார்த்தனை
பி.ப.4.45 - வரவேற்புரை S.அரவந்தன் (முகிழ்நிலை ஆசிரியர்)
பி.ப.4.50 - தலைமையுரை
பி.ப.5.00 - பாராட்டுரைகள்
* கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
* திரு.பா.தனபாலன் (உபபீடாதிபதி யாழ்.தே.க.கல்லூரி)
* திருமதி.க.இராசதுரை (அரிமாக் கழகம் அதிபர், மத்திய கல்லூரி)
* திருமதி.புவனா வேல்நிதி (கலவியியலாளர் யா.தே.க.கல்லூரி)
* திரு.T.உதயசூரியன (கௌரவ செயலாளர், இ.செஞ்சிலுவைச் சங்கம், வலி கிழக்கு பிரிவு)
* திரு.கோ.சி.வேலாயுதம் (முன்னாள் கல்விப்பணிப்பாளர்)
* திரு.இ.மயில்வாகனம் (இ.செஞ்சிலுவைச்சங்கம், வலி கிழக்கு பிரிவு)

பி.ப.5.30 - சான்றோர் கௌரவிப்பு "கருமத்திருதி" என்ற பட்டம் வழங்கி கௌரவிப்பு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
* அரிமாக் கழகம் கௌரவிப்பு
* இ.செஞ்சிலுவைச் சங்கம் கௌரவிப்பு
* சபையோர் கௌரவிப்பு
* விழா நாயகர் ஏற்புரை
* நன்றியுரை
* கலைநிகழ்ச்சிகள்
* கல்லூரிக்கீதம்.

விளம்பர அனுசரணை:
சாரங்கா நகைமாடம்
இல.157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


# சுனாமியால் இடம் பெயர்ந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதில் தெளிவான தீர்மானமொன்று தேவையென இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காகச் சர்வதேச நிபுணர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவுக்குழுவின் தலைவர் மஹிந்த சமரசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் கலந்துகொண்ட மாத்தறையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தபோது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோ எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக முழுமையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (து-9)


# சந்திப்பு ஒத்திவைப்பு

இலங்கைக்கு உதவி வழங்கும் நான்கு சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப்புலிகளுடன் நடத்தவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வு மேலதிகாரியான மேஜர் நிஷாம் முத்தலிப் படுகொலை செய்யப்பட்டதால் எழுந்துள்ள சூழ்நிலையால் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா அபிவிருத்தி திட்டப்பிரிவு, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்க இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# குரு தட்சணை




**இ.தியாகராசா**
நீர்வை.

வெளிநாட்டிலிருந்து வந்த வடிவேலுவுக்கு வீட்டில் தடபுடலான வரவேற்பு நடநதது. வடிவேலுவின் அம்மா ஓடி ஓடி மகனுக்கேற்ற சமையல் செய்வதில் மும்மரமாக ஈடுபட்டிருந்தாள். வளவுக்குள் இருந்த மாட்டுக் கொட்டிலில் நின்ற மாடுகளுக்குத் தீனிபோட்டுக்கொண்டிருந்த தன் கணவனை உரக்க அழைத்து, மரக்கறிக் கடைக்கு அவசரமாக அனுப்பிவிட்டு உடுப்பை அள்ளிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள. எப்போதும் குளித்துவட்டுத்தான் சமையல செய்வாள் வடிவேலுவின் அம்மா. இது வடிவேலுவின் அம்மம்மா சிறு வயதில் இருந்தே தன் மகளுக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன் கனடாவுக்குச் சென்றிருநத வடிவேலு இன்று காலைதான் ஊருக்கு வந்தான். பயண அலுப்புத தீர வீட்டின் படுக்கை அறையில் அசந்து தூங்கிக்கொண்டிருந்தான். ஏதோ சத்தம் கேட்டு நித்திரை கலைந்து எழுந்த வடிவேலு நேரே கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றின் நீரை அள்ளி குளிர கால் முகம் கழுவினான். கழுத்தில் இருந்த தேங்காய்ப்பு துவாயால் முகத்தைத் துடைத்தபடி,

''அம்மா! நடராசா வாத்தியார் வீட்டை போட்டுவாறன் சமையுங்கோ'' என்று கூறியபடியே சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வாத்தியார் வீடு நோக்கிச் சென்றான்.

நடராசா வாத்தியார், வடிவேலுவின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மனிதர். மனிதரல்ல வடிவேலுவைப் பொறுத்த மட்டில் அவர் அவனின் கண் கண்ட தெய்வம் என்றுகூடச் சொல்லலாம்.

வடிவேலுவுக்கு அப்போது வயது பன்னிரண்டு இருக்கும். ஆண்டு எட்டில் படித்துக்கொண டிருந்தான். ஒருநாள் அவன் தகப்பன் வேலுப்பிள்ளை வடிவேலுவைக் கூப்பிட்டு,

''தம்பி, நீ இதுவரை படிததது போதும். இனி என்னுடன் தோட்டத்திற்கு வந்து, தோட்ட வேலைகளில் உதவி செய்'' என்று சொல்லிவிட்டார். தகப்பன் சொல்லைத் தட்டியறியாத வடிவேலுவும் விருப்பம இல்லாவிட்டாலும், சரி என்று நின்றுவிட்டான்.

நாலு நாட்களாக வடிவேலு பாடசாலைக்குப் போகவில்லை. நாலாம் நாள் விளக்கு வைத்த நேரம்

''வேலுப்பிள்ளை! வேலுபபிள்ளை!'' என்று யாரோ வடிவேலு வீட்டுப் படலையில் கூப்பிடும் குரல் கேட்டது. குரலில் இருந்து அது நடராசா வாத்தியார்தான் என்று மட்டுக்கட்டிக்கொண்ட வேலுப்பிள்ளை,

''வாத்தியாரே.. வாருங்கோ, சொல்லி அனுப்பியிருந்தா நானே வந்திருப்பன். நீங்கள் ஏன் பொழுதுபடும் நேரத்தில் அலைககளிந்தனீங்கள்'' என்றபடியே ஓடிச்சென்று வாத்தியாரைக் கூட்டிவந்து வீட்டின் முற்றத்தில் போட்டிருந்த வாங்கில் உட்கார வைத்துவிட்டு அவரின் முன்னால் பணிந்து நின்றார்.

''அதுசரி வேலுப்பிள்ளை, பொடியனை ஏன் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று நிப்பாட்டினனி... நாலு நாளாய் அவன் பள்ளிக்கூடம் வரவில்லை'' என்று சற்று உறைப்பாக வாத்தியார் கேட்டார்.

''ஓம் வாத்தியார், என்ரை பாடும் கஷ்டம். தோட்ட வேலைகளுக்கும் உதவிக்கு ஆள் இல்லை. படிச்சாப் போல எல்லாருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைககப் போகுதே, அதுதான் அவன் படிச்சது காணும் என்று நிப்பாட்டிப் போட்டான்'' என்றார் வேலுப்பிள்ளை.

''வேலுப்பிள்ளை, சும்மா வசர்க்கதை கதையாதை. அவன படிக்கக்கூடிய பிள்ளை. அவனைக் கெடாதை. உனக்குக் கஷ்டமென்றால் அவன்ரை படிப்புச் செலவு எல்லாத்தையும் நானே பொறுத்துக்கொள்கிறேன். நாளைக்கு அவனைப் பாடசாலைக்குக் கட்டாயமாக அனுப்பு'' என்று சொல்லிவிட்டு வாத்தியார் சென்றுவிட்டார்.

நடராசா வாத்தியார் தலையிட்டதால் வடிவேலுவின் கல்வி தொடர்ந்தது. வடிவேலுவும் ஊக்கத்துடன் படித்தான். க.பொ.த. உயர்தரமும் பாஸ் செய்து விட்டான். அதுவரை அவன் கல்வி கற்க ஏற்பட்ட செலவை நடராசா வாத்தியாரே ஏற்றுக்கொண்டார்.

க.பொ.த. உயர்தரம் பாஸ் செய்த பின் வடிவேலு தன் தகப்பனுக்கு உதவியாகத் தோடட வேலைகளில் பங்கேற்று வந் தான்.

ஒருநாள் வடிவேலுவை, ஆள்விட்டு தன் வீட்டுக்குக் கூப்பிட்டார் வாத்தியா. வடிவேலுவும் விரைந்து சென்றான்.

''தம்பி வடிவேலு! இந்தக் காலத்தில் ஏ.எல் உடன் வேலை எடுப்பது கஷ்டம். எத்தனையோ பொடியள் ஏ.எல். படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்குதுகள். உனக்கு விருப்பம் என்றால் உன்னை என் செலவில் வெளிநாடு அனுப்பிவைக்கிறேன். நீ வெளிநாடு போய் உழைத்து உனக்காக நான் படப்போகும் கடனைத் தீர்க்கலாம்''

அதன்பின் வாத்தியாரே எல்லா ஏற்பாடுகளும் செய்து வடிவேலுவை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தார். வடிவேலு வெளிநாடு சென்று உழைத்து வாத்தியாருக்குக் கொடுக்க வேண்டிய கடனையும் கட்டி தன் குடும்பத்தையும் நல்ல நிலைக்குக் கொண்டுவந்துவிட்டான். தான் இந்த நிலைக்கு வரக் கரணமாக இருந்த நடராசா வாத்தியாரை அவன் கண்கண்ட தெய்வமாக மதிக்கிறான்.

''வாத்தியார்! வாத்தியார்!'' என்று வாத்தியாரின் கேற்றடியில் நின்று வடிவேலு கூப்பிட்டான். முற்றத்தில் நின்ற பூங்கன்றுகளுக்கு நீ பாச்சிக் கொண்டு நின்ற வாத்தியாரின் ஒரே மகள் அன்பு உள்ளே சென றாள்.

''ஆரது வடிவேலுவே, வா தம்பி வா... இன்று வெளிநாட்டால் நீ வருவாய் என்று உன் அப்பா சொன்னார்''

''சற்று முன்தான் வந்தனான் ஐயா. ஏதோ உங்களைப் பார்க்கவேண்டும் போல் இருந்தது வந்துவிட்டேன்'' என்று சொல்லியபடியே வாத்தியாரின் இரு பாதங்களையும் பணிவுடன் தொட்டு வணங்கினான் வடிவேலு.

''நல்லாய் இரு. கடவுள் உன்னை ஆசீர்வதிபபார்'' என்று கூறியபடியே வடிவேலுவை அழைத்துக்சென்று முன் விறாந்தையில் போட்டிருந்த கதிரையில் அமரவைத்து தானும் ஓர் கதிரையில் அமர்ந்துகொண்டார்.

''ஏதோ உங்கள் உதவி யாலும் தயவாலும் நானும் என் குடும்பமும் நல்லாய் இருக்கிறம் வாத்தியார். அதுசரி உங்கள் சுகங்கள் எப்படி? அதை முதலில் கூறுங்கள்''

''எனக்கு என்னடா குறை. ஓய்வூதியம் வருகிறது. நேரத்துக்கு நேரம் மனைவியும் என் அருமை மகள் அன்புவும் சமைத்துப்போடுகிறார்கள். கடவுளே என்று ஒருகுறையும் இல்லை. ஒரே ஒரு குறைதான். அன்புவுக்கு இருபத்தைந்து வயதாகிறது. இன்னமும் திருமணம் செய்து வைக்கவில்லை அது தான் என் கவலை''

''ஏன் ஐயா அன்புவுக்கு வரன் பார்க்கவில்லையா?''

''பல இடங்களிலும் பார்த்தேன். ஆனால் அவர்கள் கேட்கும் சீதனப் பணத்தை என்னால் கொடுக்கமுடியவில்லை. கொஞ்சமா கேட்கிறார்கள்? பத்து இலட்சம் இருபது இலட சமல்லோ கேட்கிறார்கள்! அவ்வளவு பணம் என்னிடம் ஏது?''

உழைக்கும் போதும் நான் சேர்க்கவில்லை. இப்போது நான் வைத்திருக்கும் பணத்தைக் கூட்டிப் பெருக்கிப் பார்த்தாலும ஒரு இலட்சம் கூடத் தேறாது. அன்புவின் கவலைதான் எனக்கு. அவளை யாராவது ஒருவன் கையில் கொடுத்துவிட்டால் என் கவலை தீர்ந்தது''.

''நீங்கள் உங்கள் உழைப்பின் பெரும் பகுதியை ஏழைப் பிள்ளைகளுக்கு புத்தகம், கொப்பி, பேனை, பென்சில் என்று வேண்டிக் கொடுத்தே செலவழித்தீர்களே. போதாததற்கு சில மாணவர்களுக்கு வசதிக்கட்டணம்கூட கட்டிப் படிக்கவைத்தீர்கள. இது எல்லாம் நான் தெரிந்த விடயம் தானே. ஏணி போல நீங்கள் இருந்த இடத்திலேயே இருக்க' நீர்கள். உங்களைப் படியாகப் பயன்படுத்திப் பலர் மேலே சென்று விட்டார்கள்''

''வடிவேலு! அதுதான் ஒரு ஆசிரியரின் கடமை. என்னால் பலரும் முன்னேறியுள்ளனர் என்றாயே அதைக் கேட்க எனக்கு எவ்வளவு பெருமையாக உள்ளது'' என்றார் நடராசா வாத்தியார் சற்றும் சலனமின்றி.

இபபடிப் பல விடயங்களையும் பேசி விட்டு மதியச் சாப்பாட்டு நேரம் தன் வீடுவந்து சேர்ந்தான் வடிவேலு. அப்பாவும் மகனும் சாப்பிட வடிவேலுவின் அம்மா இருவருக்கும் உணவு பரிமாறினாள். வடிவேலுவின் அப்பா லேசாகச் செருமிவிட்டு மகனைப் பார்த்துச் சொன்னார்,

''தம்பி, உனக்கு வயது முப்பத்திரண்டாகிறது. இனியும் கல்யாணம் செய்யாது இருப்பது முறையல்ல.

இம்முறை கல்யாணத்தை செய்துகொணடு நீ கனடாவுக்குப் போ. இப்ப போனா இனி எப்ப வருவியோ யார் கண்டது...''

''அப்பா! எனக்குக் கல்யாணம் செய்வதில் ஆட்சேபனை இல்லை. நான் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு நடராசா வாத்தியாரே காரணம். தன் சொந்தச் செலவில் என்னைப் படிப்பித்து பின் யாரிடமோ கடனபட்டு என்னை வெளிநாட்டிற்கும் அனுப்பிவைத்தார்.

ஆனால் அவரின் நிலை இன்று என்ன? தன் ஒரே மகளான அன்பைத் திருமணம் செய்துகொடுக்க சீதனப் பணம் இல்லாது கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார். எனக்குத் திருமணம் செய்துவைக்க நீங்கள் விரும்பினால் அவர் மகள் அன்பைச் செய்துவையுங்கள். சீதனம் எதுவுமே கேட்கவேணடாம்''.

வடிவேலு இப்படிக் கூறியதும் அவனின் அப்பா முதலில் திகைத்துப் போனார். பின் தன்னை நிதானப்படுத்திக் கொண்டே கூறினார்,

''தம்பி, வாத்தியார் உனக்குச் செய்த உதவியால்தான் நம் குடும்பம் நன்கு இருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஒரு உத்தமர் தன் ஒரே மகளைத் திருமணம் செய்து கொடுக்க முடியாது கவலைப்படுகிறார் என்கிறாய். கேட்க மனவேதனையாக இருக்கிறது. நன்றி மறப்பது நன்றன்று. உன் முடிவு சரியானதே. நான் நாளைக்கே சென்று அவரைச் சந்தித்து பெண் கேட்கிறேன். இந்த வைகாசியிலே திருமணத்தை முடித்துவிடலாம்'' என்றார்.

'தன் குரு துரோணாச்சாரியாருக்கு ஏகலைவன் தன் பெருவிரலையே குரு தட்சணையாகக் கொடுத்தான்.

வடிவேலுவோ தன் குரு நட ராசா வாத்தியாருக்கு குரு தட்சணையாக தன்னையே மனமுவந்து கொடுக்கிறான்.

இதில் ஏகலைவன் உயர்ந்தவனா? இல்லை வடிவேலு உயர்ந்தவனா? என்று சிந்தித்தபடியே வடிவேலுவின் அம்மா இருவருக்கும் உணவு பரிமாறினாள்.

(யாவும் கற்பனை)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ.திருநாவுக்கரசு 11

காலம் ஒரே மாதிரியிருப்பது இல்லையல்லவா? ஆதலால் நாடற்ற இந்த மக்களது நிலைக்குப் பரிகாரம் தேடவேண்டிய கட்டாயம் இலங்கை-இந்திய அரசுத் தலைவர்களுக்கிடையே ஏற்பட்டது. மூன்று ஒப்பந்தங்கள் உருவாக்கம் பெற்றன. அவற்றுள் 1964இல் ஏற்பட்ட சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் சிறப்பானது. அதன் அமைவிற்கிணங்க சில இலட்சம் இந்திய வம்சாவழியினர் இந்தியக்குடியுரிமை பெற்று இந்தியா திரும்பினர். ஒப்பந்த விகிதாசாரத்துக்கிணங்க இலங்கைக் குடியுரிமை வழங்கும் முயற்சிகளும் நடைபெற்றன. ஒப்பந்த அமுற்படுத்தற் கால எல்லை கடந்தது. இருந்தும் பிரச்சினைகள் நீடிக்கவேதான் செய்தன.

இரண்டு நாடுகளினதும் குடியுரிமை பெறமுடியாத 94,000 பேரினதும் அவர்களின் இயற்கையதிகரிப்பினதும் பிரச்சினைகள் முன்னின்றன. சர்வதேச அபிப்பிராயங்களும், அரசியல் அழுத்தங்களும் ஐ.தே.கட்சி அரசாங்கத்தை நெருக்குதல் செய்தன. இதன் பயனாக 1986ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டமானது 18 மாதங்களுக்குள் நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்படுமெனக் கூறியது. தொழிற்சங்கப் போராட்டங்கள், இடதுசாரி அமைப்புகளினது கோரிக்கைகள், பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினது ஆதரவு முதலிய காரணிகள் இணைந்து காலந் தாழ்த்தி நிற்கும் நாடற்றோர் பிரச்சினைக்கு வழிதேடுமாறு அரசைத் தூண்டியது. 1988ஆம் ஆண்டு 39ஆம் இலக்க 2ஆம் பிரிவு- நாடற்ற ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடு) சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட நாடற்ற இலங்கையர் குடியுரிமை பெற்றுக்கொள்ள வழியேற்பட்டுள்ளது. ஆயினும், நடைமுறைச் சிக்கல்களும், அரசாங்க நிர்வாகச் செயற்பாட்டு வேகக் குறைவுகளும் பிரச்சினைக்கான தீர்வினை முழுமைசெய்ய உதவவில்லை. எனவே, துரிதமாக்கப்படும் செயல்முறைகளினாலேயே இந்தியத் தமிழர் பிரச்சினையானது தீர்த்து வைக்கப்படுமென்பதும், அது ஆளுவோரின் அந்தரங்க சுத்தியிலேயே தங்கியிருக்கிறதென்பதும் பொருத்தமான கூற்றாகும்.

### குடியேற்றங்கள்

***டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் அரசாங்க சபையில் விவசாய மந்திரியாகவிருந்த போது அத்திவாரமிடப்பட்டு, 1948ஆம் ஆண்டளவில் அவர் பிரதமரானவுடன் முடுக்கி விடப்பட்ட ''குடியேற்றம்'' பற்றிய பிரச்சினையானது, இலங்கையின் சிறுபான்மையினத்தவர்களான தமிழ்பேசும் மக்களிடையே, பெரும்பான்மையினர் பற்றிய அச்சவுணர்வை மேலும் வளர்த்துச் சென்றதெனலாம். சட்டரீதியான அரசாங்கத்தின் செயற்பாடுகள் யாவும், தமது பாரம்பரியத் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களின் ஆளுவோரின் ஆதிக்கக் கரங்கள் வலுப்பெறவும், தமது ஒழுங்கமைக்கப்பட்ட இயல்பு நிலை பாதிக்கப்படவும், தமிழ்பேசும் மக்களுக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவப் பலம் சூறையாடப்படவும், இனக்குழுவினரிடையே மோதல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகவும் வழிவகுக்குமென அவர்கள் கருதினர்.*** ஆனால் அரசாங்கமோ நாட்டின் தேசிய பொருளாதார நன்மைகருதி விவசாய அபிவிருத்திக்காகவும், செறிவு கூடிய பகுதி மக்களைப் புலம்பெயர்ந்து வரண்ட ஐதான பகுதிகளில் குடியமர்த்தி கைத்தொழில் விவசாய நடவடிக்கைகளிலீடுபடுத்தவுமே விரும்பியதாகக் கூறியபோதிலும், நடைமுறையில் தமிழ்பேசும் மக்களது ஊகங்களும் பயப்பாடுகளும் அர்த்தமுள்ளவையென விளங்கலாயிற்று.

''வரண்ட பிரதேசங்களில் நவீன குடியேற்றத்திட்டங்கள்
டி.எஸ்.சேனநாயக்காவினால் 1932ஆம் ஆண்டில்
ஆரம்பிக்கப்பட்டன. 1951டிசம்பரில் வரண்ட
பிரதேசத்தில் பல்வேறு அளவினதான 24 குடியேற்றத்
திட்டங்கள் காணப்பட்டன.''

இவ்வாறு பி.எச்.பாமர் எழுதிய நூலொன்றில் காணப்படுகிறது.

வடக்கு மாகாணத்தைப் பார்க்கிலும், வளமிக்க கிழக்கு மாகாணமே பல்வேறு நிலைகளிலும் சிங்களக் குடியேற்றத்துக்கு இரையாகித் தனித்துவம் இழக்கலாயிற்று. எவ்வளவு எதிர்ப்புகளைத் தமிழ்பேசும் மக்கள் காட்டியபோதிலும், இலங்கையின் சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சி பீடத்தினர் அழுங்குப்பிடியுடன், சிங்களக் குடியேற்ற வேகத்தைத் துரிதப்படுத்தியே வந்துள்ளனர். சுதந்திரத்திற்குப் பின்னதான காலகட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் தொடர்ச்சியாகவும் அதிகமாகவும் வாழுகின்ற வட-கிழக்கு மாகாணங்களில் அவர்களது பெரும்பான்மையைச் சிதறடிக்கும் நோக்கத்துடனும், பிரதேச ரீதியான ஒற்றுமைத் தொடர்பைத் துண்டிக்கும் நோக்கத்துடனும் உருவாக்கப்பட்டதாகத் தமிழர் தரப்பில் குற்றஞ்சாட்டப்படும் பிரதான சிங்களக் குடியேற்ற முயற்சிகள் வருமாறு:

கல்லோயாத் திட்டம்
சங்கமம் குடியேற்றத்திட்டம்
நாவல் ஆற்றுத்திட்டம்
அம்பலவன் ஓயாத்திட்டம்
மாதுரு ஓயாத்திட்டம்
உல்கித்த ஓயாக் குடியேற்றத்திட்டம்
அல்லை குடியேற்றத்திட்டம்
கந்தளாய் குடியேற்றத்திட்டம்
பதவியாக் குடியேற்றத்திட்டம்
மொறவேவா (முதலிக்குளம்) குடியேற்றத்திட்டம்
வாகல்கடவெல குடியேற்றத்திட்டம்
சேருவாவில, திரியாய் புனித நகர்த்திட்டங்கள்
பிரிமா மாவாலை குடியேற்றத்திட்டம்
திருமலைத் துறைமுகம் கருதி நகர்ப்புற சுயமான குடியேற்றத்திட்டம்
முல்லைத்தீவு மணலாற்று (வெலிஓயா)த்திட்டம்
மன்னார் கொண்டச்சி மரமுந்திரிகைக் குடியேற்றத்திட்டம்
மன்னார், முல்லைத்தீவு, புன்னைக்குடா, நாயாறு மீனவர் குடியேற்றத்திட்டங்கள்
வவுனியா பாவற்குளம், உலுக்குளம் குடியேற்றத்திட்டங்கள்
மாமடுவ, மடுக்கந்த அபிவிருத்தித் திட்டங்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர் குடியேற்றத்துக்கான பாரிய முன்முயற்சியாக அமைந்தது கல்லோயாத்திட்டமாகும். இத்திட்டம் பற்றி மா.துரைநாயகம் ஈழநாடு இல் எழுதிய கட்டுரை பல தகவல்களைத் தருகிறது.

(தொடரும்)

# இரண்டாம் நிலைக் கல்வி அபிவிருத்தி; 5 பில்லியன் நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இரண்டாம் நிலைக் கல்விக்கென 1200 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இரண்டாம் நிலைக்கல்வி அபிவிருத்திக்கென 5 பில்லியன் செலவில் பாடசாலைகளை நவீனமயப்படுத்தும் திட்டத்தை ஆரம்பிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதித்துள்ளது. இதன் மூலம் கிட்டத்தட்ட 1200 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

1997-2001 வரை இடம்பெற்ற முதலாவது அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து இரண்டாம் நிலை அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக 8பில்லியன் செலவில் நாடுமுழுவதும் 2300 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இரண்டாம் கட்டம் ஏப்ரலில் 2005 இல் ஆரம்பமாகியது. பிரதானமாக இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவது, நிர்வாகத்தை வலய, மாகாண மட்டங்களில் அபிவிருத்தி செய்வது, கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்வது என்பன இத்திட்டத்தில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ரு-6)

# ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கும் கிளி.மருத்துவமனை

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை ஆளணிப் பற்றாக்குறையின் மத்தியிலும் இரண்டரை இலட்சம் மக்களுக்குப் பணியாற்றுகிறது என்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி இ.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் தற்போதைய நிலவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

வன்னிப் பெருநிலப்பரப்பில் இரண்டரை இலட்சம் மக்களின் மருந்துத் தேவையினை நிறைவு செய்யும் வகையில் எமது மருத்துவமனையின் செயற்பாடுகள் உள்ளன.

மருத்துவமனையில் ஆளணிப் பற்றாக்குறை என்பது பாரிய பிரச்சினையாக உள்ளதுடன் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கும் போதிய இடவசதியில்லாத நிலை உருவாகியுள்ளது.

எமது மருத்துவமனையில் 40 மருத்துவர்களும் 70ற்கும் மேற்பட்ட தாதியர்களும் 12மருத்துவ மாதுக்களும் 100 சிற்றூழியர்களும் பணிபுரிய வேண்டிய இடத்தில் தற்போது 7மருத்துவர்களும் 15 தாதியர்களும் 3மருத்துவ மாதர்களும் 51சிற்றூழியர்களுமே கடமைபுரிகின்றனர்.

மருந்தகத்திற்குத் தேவையான மருந்தாளர், மருந்துக் கலவையாளர், ஆய்வுகூடப் பரிசோதகர்கள் ஒருவரும் பணியில் இல்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே எமது மருத்துவமனை இயங்கி வருகிறது.

நாள்தோறும் 850க்கும் மேற்பட்ட நோயாளர்கள் வருகை தருகின்றனர். இவர்களில் 200 பேர் வரை தங்கிச் சிகிச்சை பெறவேண்டிய நிலையில் 100பேர் சிகிச்சை பெறக்கூடிய கட்டில் வசதிகள் மட்டும் எமது மருத்துவமனையில் உள்ளது.

இந்நிலையில் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டியுள்ளது.

நாள் ஒன்றுக்கு நான்கு தடவைகள் நோயாளர் வண்டி யாழ்ப்பாணம் சென்று வரவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை,1996ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சத்ஜெய படை நடவடிக்கையின் போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை முற்றாக அழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரு)

# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)



தெல்லிப்பழை பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்றுநோய் வைத்தியசாலையைப் புனரமைத்து மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறும் விடுதிகள் பல புனரமைப்புச்செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை காலை யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டன.

சி.எச்.எவ்.சர்வதேச நிறுவனத்துடன், ஐக்கிய நாடுகளின் உதவி நிறுவனம் மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன சுமார் எண்பது இலட்சம் ரூபா நிதி செலவில் இந்த வைத்தியசாலையைப் புனரமைத்து வருகின்றன.

மேலும் இந்த வைத்தியசாலையின் சுற்றாடலில் காணப்பட்ட இடிபாடுகளை இராணுவத்தின் பொறியியல் பிரிவினரின் பாரம்தூக்கி இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தி அப்பகுதி முழுவதையும் சிரமதானப் பணிகள் மூலம் ஏற்கனவே இராணுவ வீரர்கள் துப்புரவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டடத் தொகுதி கையளிப்பு நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவத் தளதிப மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனால் நியமிக்கப்பட்ட யாழ்.மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பதிகாரி லெப்டினன் கேணல் எம்.டபிள்யூ.ஈ.டபிள்யூ.டி.ஈ. சில்வா மற்றும் சி.எச்.எவ்.சர்வதேச நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் எட்றெயின் போட்டர், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ்.மாவட்ட ஆலோசகர் எடிவோக்கர், தெல்லிப்பழை அரச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி நிவேந்திரன் மற்றும் வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரு)

# பரீட்சை

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சை எதிர்வரும் 11,12,13ஆம் திகதிகளில் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறுமென தேசிய கல்வி நிறுவக பிரதேச இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி ப.வில்வநாதன் அறிவித் துள்ளார். (ரு-8)

# பாராளுமன்றத் தெரிவுக் குழு அம்பாறையில் விரிவான ஆய்வு

(அம்பாறை)

இயற்கை அனர்த்தம் தொடர்பாக ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழு நேற்று முன்தினம ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கு பயணம் மேற்கொண்டது.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் என 22 பேர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள மட்டும் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டு பாதிக்கபபட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் ஆராய்ந்தனர்.

குழுத்தலைவர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான இக்கழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான மயோன் முஸ்தபா, ஜோன அமரதுங்க மற்றும் மஹிந்த விஜயசேகர ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிகாரிகள் சமய, சமூக பிரமுகர்கள், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினரையும் இக்குழு சந்தித்துக் கலந்துரையாடியது.

இக் குழுவினா இதுவரை மேற்கொள்ளபபட்ட நிவாரணப் பணிகள் குறித்தும், இனிமேல் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் பின்னர் மாலையில் கல்முனை, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, மருதமுனை ஆகிய இடங்களிலுள்ள தற்காலிக இருப்பிடங்களுக்கும் இடைத்தரிப்பு குடியிருப்புக்களுக்கும நேரில் பயணம் செய்த இக்குழுவினர் அங்கு தங்கியுள்ள குடும்பங்களைச் சந்தித்து பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்துகொண்டனர்.

இக்குடும்பங்களைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக எடுத்துத் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலை ஏற்பட்டு 5 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் தமக்கு நிரந்தர குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் அரசாங்க தரப்பிலிருந்து எடுக்கப்பட்டதாக இல்லை என்றனர்.

மேலும், 200 மீற்றர் கடல் எல்லைக்கு அப்பால் மட்டும் குடியிருக்க அனுமதி என்ற அரசாங்கத்தின் தர்மானம் கல்முனை பிரதேசத்தைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. இதற்குக் காரணம் குடியிருப்பற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய காணி வசதிகள் இன்மை.

இடைத்தரிப்பு குடியிருப்புகளும், தற்காலிக முகாம்களும், தகரங்களினால் அமைக்கப்பட்டுள்ளதால் தற்போதைய வெப்பகாலத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது. இதனால் பல்வேறு நோய்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

தரமற்ற உலர் உணவு நிவாரண விநியோகம் பிள்ளைகளை முகாம்களிலிருந்து பாடசாலைகளுக்கு அனுப்புவது தொடர்பான போக்குவரத்துப் பிரச்சினை மற்றும் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த ரூபா 5 ஆயிரம் மாதாந்தக் கொடுப்பனவு இடைநிறுத்தம் போன்ற விடயங்கள் குறித்தும் இக்குடும்பங்கள் சுட்டிக் காட்டியுள்ளமை பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா இதுபற்றித் தெரிவித்தார். (ர-4)

## பதில் அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா சென்றுள்ளதினால், ஜனாதிபதி பொறுப்பு வகித்த அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ண சிறி விக்கிரமநாயக்கவும், பதில் பாடசாலைக் கல்வி அமைச்சராக மங்கள சமரவீரவும், பதில் உயர் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் கடமையேற்றுள்ளனர். (அ-08)

## நோர்வேத் தூதுவரைச் சம்பந்தன் சந்தித்தார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் நோர்வேத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது சுனாமி ஆழிப் பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சம்பநதன் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுததினார்.

அத்துடன் நடைமுறை அரசியல் விடயங்களும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிககப்படுகின்றது. (அ-4)

## முத்தலிப் கொலை விசாரணையில் 4 சிறப்பு பொலிஸ் விசாரணைக் குழு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி முத்தலிப் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்த 4 சிறப்பு பொலிஸ் விசாரணைக் குழுக்கள் அமைகக்கப்பட்டது.

இக்குழுக்களில் மொத்தம் 150 பொலிஸார் இடம்பெற்றுள்ளனர் என்றும் இந்தக் கொலை வழக்கில் உண்மைக் குற்றவாளிகளை விரைவில் கண்டறிவோம் என்றும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டொ தெரிவித்தார்.

இதனிடையே முத்தலிப் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஹுடன் விஜயரட்ன முத்தலிப்பின் தலையின் உள் பகுதியில் 7. இடங்களிலும் வெளியில் 4 இடங்களிலும் தலை மற்றும் மார்புப் பகுதியில் குண்டுகள் பாய்ந்ததாலும் உயிரிழந்தார் என்று தெரிவித்துள்ளார். (து-4)

## பயங்கரவாதச் சட்டத்தை தீவிரமாக்க கோருகிறார்

### ஹெல உறுமய கொள்கை வகுப்பாளர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மீண்டும் தீவிரமாக அமுல் செய்யப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் விடுதலைப்புலிகளின்தும், விடுதலைப்புலி ஆதரவாளர்களினதும் நடமாட்டங்களும், அச்சுறுத்தல்களும் அதிகரிததுள்ளன. இதன்காரணமாகவே படுகொலைகள் அதிகரித்துள்ளன. எனவே படுகொலைகளைக் குறைக்கவேண்டுமாயின் விடுதலைப்புலிகளின் கொட்டத்தை அடக்கவேண்டும். விடுதலைப்புலிகளின் கொட்டத்தை அடக்கவேண்டுமாயின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தீவிரமாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இராணுவப் புலனாய்வுத் துறையின் அதிகாரி முத்தலிப் கொல்லப்பட்டமையையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிராக அரசாங்கம நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையானது புதுமையானது எனக் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் இராணுவப் புலனாய்வுப்பிரிவை மீளமைக்க வேண்டும் எனத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க ஜனாதிபதியின் வசமுள்ள 64 மேலதிக வாகனஙகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (அ-04)

## எஸ்.பி.க்கு மாற்று யார்? ஐ.தே.கட்சிக்குள் குழப்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனை காரணங்களாகப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு மாற்றாக யாரை நியமிப்பது என்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பொறுப்பாளா லக்ஷ்மன் கிரியல்லவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் நிலைக்குழு முடிவு செய்துள்ளது. ஆனால் இவரது நியமனத்தை எதிர்க்கும் கட்சியின் ஒரு பிரிவினர் மூத்த அரசியல் வாதியான ரேணுகா ஹேரத்தை நியமிக்கக் கோருகின்றனர்.

மற்றொரு பிரிவினரோ சிறையில் உள்ள எஸ்.பி.திஸநாயக்கவின் துணைவியார் தாமர திஸநாயக்கவுககே வெற்றிடமாகும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் இறுதி முடிவெடுக்கமுடியாமல குழப்பத்தில் இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (து-4)

## வீடமைப்பு நிவாரண உதவித் தொகையை அதிகரிப்பது குறித்து பேச்சு நடாத்தப்படும்

### மனோ தித்தவெல தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு இலட்சம் முதல் 2 அரை இலட்சம் ரூபா வரை வழங்கப்படும் வீடமைப்பு நிவாரண உதவித் தொகையை அதிகரிப்பது தொடர்பாக உதவி வழங்கும் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான படையணியின் தலைவர் மனோ தித்தவெல குறிப்பிட்டுள்ளார்.

100 மீற்றர் எல்லைக்கு அப்பால் சுனாமியால வடுகளை முற்றாக இழந்தவர்களுக்கு 2அரை இலட்ச ரூபாவும், வீட்டின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோதும், பணவீக்கம் காரணமாக இத்தொகை வீடொன்றை முற்றாகக் கட்டிக் கொள்வதற்கு பற்றாக்குறையாக இருக்கிறது.

இதனால் மேலதிகமாக நிதியைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் அரசுக்கு இருக்கின்றதா? என மனோ தித்தவெலவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதவி வழங்கும் அமைப்புக்கள் மற்றும் அரசின் திட்டங்களின்படி ஒரு இலட்சம் முதல் 2அரை இலட்சம் வரை உதவுதொகை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் தொடர்பாக மேற்படி அமைப்புக்களுடன் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்தவும் சாதகமான பதிலைப் பெறவும் தமது அமைப்பு ஆயத்தமாகவுள்ளது எனவும் மனோ தித்திவெல குறிப்பிட்டுள்ளார். (ர-9)

## இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்புக்கு — போதிய வாகன வசதியில்லை —

(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரிகளின் பாதுகாப்பிறகு வழங்குவதற்கு போதிய அளவு வாகனங்கள இல்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படடிருக்கும் இராணுவ அதிகாரிகள் பாதுகாப்பிற்கென வழங்கப்பட்ட ஜீப் வண்டிகளில் பெருமளவை அம்மச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் பாதுகாப்பிற்குத் தேவை என எடுத்துச் சென்றுள்ளனர் எனவும், இதனால் கொலை அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்திடமிருக்கும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பிற்கென வழங்கப்படும் ஜீப் வண்டிகளில் 95 வீதமான ஜீப் வண்டிகளை அமைச்சர்கள் தமது பாதுகாப்பிற்குத் தேவையென எடுத்துச்சென்றிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த அதிகாரிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படாததுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க போதியளவு வாகனங்கள் இன்மை பெரும் பிரச்சினையாக இருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (து-4)

## றிஷேவ் பொலிஸ் சேவையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

றிஷேவ் பொலிஸ் சேவையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு சேவைசார்ந்த உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்த சேவையில் 30ஆயிரம் பேர்வரை இணைந்துள்ளனர். பெரும்பாலானோர் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சேவையாற்றுகிறார்கள். தாம் நிரந்தர பொலிஸ் சேவையில் கடமைகளை நிறைவேற்றிய போதும் கிடைக்கும் வசதிகள் போதுமானவை அல்ல என்பதே றிஷேவ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆதங்கமாகும்.

நிரந்தர சேவைக்கு உள்ளர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் போன்றவை சார்ந்த முறையான நடைமுறையை அனுசரிக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய நடைமுறைக்கேற்ப இருபது வருடகாலம சேவையாற்றிய ஒருவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுகிறது.

கூடிய தகைமைகளைப் பூர்த்திசெய்வோரை பத்து வருட காலத்திற்குள் நிரந்தர சேவையல் சேர்த்துக்கொள்ள வேண்டுமென றிஷேவ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ர-5)

## பட்டப்படிப்புக்காக புலமைப்பரிசில் வழங்க ரஷ்ய பல்கலைக்கழகம் தீர்மானம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவாகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்க ரஷ்யப் பல்பலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

25வயதிற்குட்பட்ட மாணவர்கள் இந்தப் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க முடியுமென்று கல்வியமைச்சு தெரிவிததுள்ளது.

இவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினராக இருத்தல் அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொறியியல், மருத்துவம், விவசாய விஞ்ஞானம், பூகோளவியல் விஞ்ஞானம், சட்டம் ஒழுங்கு, சமூக விஞ்ஞானம் ஆகிய பட்டப்படிப்புக்களுக்கு இவர்கள் விண்ணப்பிக்க முடியும.

இவர்களுக்கான விண்ணப்ப படிவங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (அ-9)

## கூட்டம்

(பொன்னாலை)

வலி-தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10மணிக்கும் 12 மணிக்கும் நடைபெறவுள்ளன.

வலி-தென்மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இக கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (ர-49)

## ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர பதவி!

# இந்தியாவுக்கு சாதகமாகும் சீனாவின் கருத்து



(விளாடிவோஸ்டாக்)

ஐ.நா.பாதுகாப்பு நிரந்தர உறுப்பினர் பதவியை இந்தியா பெறுவதற்கு நாங்கள் தடையாக இருக்கமாட்டோம் என சீனா திட்ட வட்டமாக தெரிவித்துள்ளது. சீனாவின் இந்த கருத்து இந்தியாவுக்கு மிகவும் சாதகமானது என்று கருதப்படுகிறது.

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள துறைமுக நகரான விளாடிவோஸ்டாக்கில் இந்திய - ரஷ்ய - சீன முத்தரப்புக் கூட்டம் நடந்தது. இதில் இந்திய வெளியுறவு அமைச சர் நட்வர்சிங் கலந்துகொண்டார்: சீன வெளி யுறவு அமைச்சர் லீஜாவொசிங்கிற்கு நட்வர் சிங் நேற்று முன்தினம் காலை விருந்தளித் தார். அப்போது சீன வெளியுறவு அமைசசர் லீஜாவோசிங் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அந்த நகல் தீர்மானம் தொடர் பாகவும் நட்வர்சிங்கும் சீன அமைச் சர் லீயும் பேச்சு நடத்தினா. பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். இருவரும் நடத்திய பேச்சுவார்த்தை சுமு கமாகவும், சாதகமாகவும் இருந்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ.நா. சீர்திருத்தங்கள், ஐ.நா.பாது காப்பு சபையை விரிவுபடுத்திட வேண்டிய தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக வும நடவர்சிங்குடன் சீன அமைச்சர் விரிவாக பேச்சு நடத்தினார். சீனப் பிரத மர் வென்ஜியாபாவோவின் இந்திய பய ணம் மிகவும் சாதகமாக அமைந்ததாக இரு தலைவர்களுமே ஒப்புகொண்டனா.

சீனப் பிரதமரின் இந்திய பயணத் தின்போது இரு நாடுகளும் பரஸ்பரம் ஒப்புக் கொண்ட விஷயங்களை முழுமையாக அமுல் படுத்த வேண்டியது அவசியம் என நட்வர்சிங்கும், சீன அமைச்சர் லீயும் வலியுறுத்தினா.

இந்தியா- சீனா இடையே உயரிய மட்டங்களில் தொடர்புகள் ஏற்பட்டுள்ளது குறித்து இரு வெளியுறவு அமைச்சர்களும் திருப்தி தெரிவித்தனர். இதை மேலும் பலப்படுத்திட வேண்டும் என இருவரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஜி.8 எனும் குழு -8 நாடுகளின் கூட்டம் பிரிட்டனில் உள்ள ஷ்கொட்லாந்தில் ஜூலை யில் நடைபெறவுள்ளது. அப்போது இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கும், சீனப் பிரதமர் வென்ஜியாபாவோவும் ஸ்கொட்லாந்தில் சந் தித்துப் பேசவுள்ளனர்.

இந்திய உள்துறை அமைசசர் சிவராஜ் பாடீல் விரைவில் சீனா செல்ல இருப்பதாக இந்திய தூதரக அதிகாரிகள் விளாடிவோஸ் டாக்கில் தெரிவித்தனர். (ந)

**WORLD NEWS உலக தரிசனம்**



**அவுஸ்திரேலியாவில் உள்ள புஸெல்டன் தீவில் 85க்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின. இவற்றை அங்குள்ள ஏராளமான சமூக ஆர்வலர்கள் மீண்டும் கடலுக் குள் கொண்டு செல்ல முயற்சி எடுத் தனர். இதனால் 20க்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் மீண்டும் கடலுக் குள் உயிருடன் அனுப்பிவைக்கப் பட்டன.**

# வெள்ளை மாளிகை சுவர் மீது ஏறிக் குதித்த மர்ம நபர்!

(வோஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் ஜனாதிபதி புஷ் வசிக்கும் வெள்ளை மாளி கைக்கு தென் ஆபிரிக்க ஜனாதிபதி தபோ எம்பேகி நேற்று முன்தினம் சென்றார். அங்கு அவர் புஷ்ஷை சந்தித்துப் பேசினார்.

அந்த நேரத்தில் ஒரு மர்ம மனிதன் வெள்ளை மாளிகைச் சுவர் ஏறிக் குதித்தான். அந்த நேரத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த அமெரிக்க இரகசியப் பொலிஸ் அதிகாரிகள அவனைப் பிடித்தனர். அவன் கையில் விலங்கு போட்டு தனி இடத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு மோப்பநாய்களை சுற்றிலும் நிறுத்தி வைத்துக்கொண்டு அவனை விசாரித்தனர்.

அவன் யார்?, அவன் ஏன் சுவர் ஏறிக் குதித்தான்? என்பது தெரியவில்லை. தொடர்ந் தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இச்சம்பவத்தையடுத்து வெள்ளை மாளிகையில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளதுடன் அங்கு பரபரப்பு நிலவிவருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## இராணுவ இரகசியம் விற்பனை புகார்;

# இந்திய - பாக்.நல்லுறவில் களங்கம் ஏற்படுத்தும் முயற்சி

(புதுடில்லி)

இந்திய போர்த் திட்டங்களை இந்திய இராணுவ அதிகாரி பாகிஸ்தானுக்கு விற்ற தாக பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச சா கோஹர் ஆயூப்கான் கூறிய புகார், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் களங் கம் ஏற்படுத்தும் முயற்சியாக இருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித் துள்ளாா.

1965 ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ் தான் போரின் போது போர்த் திட்டங்களை இந்திய இராணுவ பிரிகேடியர் ஒருவர் ரூ.20 ஆயிரத்துக்கு விற்றதாக பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கோஹர் அயூப்கான் குற் றம் சாட்டியிருந்தார்.

இதுபற்றி பாதுகாப்பு அமைச்சர் பிரணாப முகர்ஜி 'என்.டி.டி.யின் வாக் தி டாக்' நிகழ்ச் சிக்கு அளித்த பேட்டியில்,


1965க்குப் பின் 40 ஆண்டுகள் கடந்த பிறகு இப்போது இந்தச் செய்தியை சொல் வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியாக இருக்கலாம.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து நான் கவ லைப்படவில்லை. ஆனால் இரண்டு விஷயங் கள் என்னைக் கோபமடைய வைக்கின்றன.

பீல்டு மார்ஷல் ஆயூப்கானோ, அவரது டயரியை மேற்கோள் காட்டி அவரது மகன் கோஹர் அயூப்கானோ, இந்தியர் ஒருவரைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதை நான் எதற்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண் டும்?

இராணுவ ஜெனரல் ஒருவர் இராணுவ விஷயங்களை இராணுவ வீரராக இல்லாத தனது மகனிடம் சொல்வார் என்பது நடக்க முடியாத ஒன்று. எனினும், குற்றச்சாட்டை நான ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. அதுபற்றி விசா ரணை செய்யுமாறு இராணுவத் தலைமையிடம கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்றார். (ந)

# கலிபோர்னியாவில் நிலச்சரிவு உயிரிழப்பு ஏதுமில்லை:வீடுகள் சேதம்



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் கலிபோர்னியாவின் தென்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதில் 15க் கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந் துள்ளன. உயிர் இழப்புகள் எதுவும் ஏற்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பொலிஸார் கூறிய தாவது,

கலிபோர்னியா மாகாணத்தில் லகுனா கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு மிகப் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

நிலச்சரிவினால் 15க்கும் மேற் பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன. சேதமடைந்த வீடுகளில் பல ஆடம்பர வசதிகள் கொண்டவை. ரூ.90 லட்சத் திற்கும் மேற்பட்ட மதிப்புடையவை.

நிலச்சரிவின் காரணமாக பலர் காயமடைந்துள்ளனர். எனினும் உயி ரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

லொஸ் ஏஞ்சல்ஸ் தென்கிழக் குப் பகுதியில் இருந்து 87 கி.மீற்றர் தொலைவில் உள்ள புளுபேர்டு கென்யான் பகுதியில் நிலச்சரிவு ஏற்படலாம் என்று அதிகாரிகள் கூறியதை அடுத்து அங்குள்ள 350 குடும்பங்கள் ஏற்கனவே வெளியேற் றப்பட்டன. இவ்வாறு பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ந)

# அதிகாரிகளின் இலஞ்ச ஊழல்; பாக்.ற்கு ரூ.600 கோடி இழப்பு

(இஸ்லாமாபாத்)

இலஞ்ச ஊழல் காரணமாக பாகிஸ்தான் அரசுக்கு ஆண்டு தோறும் ரூ.600 கோடி இழபபு ஏற்பட்டு வருகிறது.

பாகிஸ்தானிலும் இலஞ்சம், ஊழலுக்கு பஞ்சமே இல்லை. கீழ்மட்டத்தில் இருந்து அரசின் உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரி கள், அரசியல்வாதிகள் வரை இலஞ்ச ஊழல சர்வ சாதாரணமாக புகுந்து விளையாடுகிறது.

இலஞ்ச ஊழல் காரணமாக ஏற்படும் விளைவுகள் பற்றி பஞ்சாப் மாகாணத்தில் உள்ள இலஞ்ச ஊழல் கண்காணிப்பு இயக்கம் ஆய்வு நடத்தி தனது அறிக்கையை அரசுககு தாக்கல் செய்துள்ளது. அந்த ஆய்வு அறிக் கையில் கூறி இருப்பதாவது,

பொதுமக்கள், அரசியல்வாதிகள், அதி காரிகள் ஆகியோரின் இலஞ்ச ஊழல் கார ணமாக பாகிஸ்தான் அரசுககு ஆண்டுதோறும் ரூ.600 கோடி இழப்பு ஏற்படுகிறது. வரி ஏய்ப்பு காரணமாகத்தான் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படுகிறது. வரி ஏய்ப்புக்கு அதிகாரிகள் உடந்தையாக இருப்பதே இதற்குக் காரணம்.

இதுதவிர, பொதுத்துறை நிறுவனங்களிலும் வங்கிகள், தொழில்துறை ஆணையத்தில இலஞ்சம் காரணமாகவும் அரசுக்கு கூடுதல் இழப்பு ஏற்படுகிறது. நாட்டின் பொருளாதாரத் தையே இது சீர்குலைக்கிறது. கடந்த பல ஆண்டுகளில் ரூ.1,35,800 கோடி பணப் பரிமாற்றத தில் ரூ.33,300 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

வரி வசூல் முறையில் குளறுபடி இருப்ப தாகவும் இதில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும் அந்த அறிக் கையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு வழங்கிய கடன்களில் 90 சதவீதம் இன்னும் வசூல் ஆகாமலேயே இருக்கிறது. இதற்கும் அதிகாரிகளின் மெத்தனப்போக்கும் ஊழலும்தான் முக்கிய காரணம். (ந)

# பாலஸ்தீன கைதிகள் 400 பேர் விடுதலை

(பாலஸ்தீனம்)

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

கடந்த சில நாட்களாக இரு தரப்பின ருக்கும் இடையே போர் நிறுத்தமும் ஏற்பட் டுள்ளது. சமரச முயற்சியின் ஒரு பகுதியாக 400 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் அரசு விடுதலைசெய்துள்ளது.

பல்வேறு கட்டமாக 900 கைதிகளை விடுதலை செய்ய இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் முடிவு செய்து இருக்கிறார்.

பாலஸ்தீன தலைவர் முகமது அப் பாஸ் - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆகியோர் எதிர்வரும் 21ஆம் திகதி நேரடியாக சந்தித்து சமரச பேச்சு நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பில் இருதரப்பு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்படும். (ந)

# அமெ. கடும் எச்சரிக்கை

ஈராக் அல் - கெய்டா இயக்கத் தலை வர் அல் - சர்காவிற்கு எந்த அண்டை நாடும் மருத்துவ சிகிச்சை அளிக்கக்கூடாது என அமெரிக்கத் தற்காப்பு அமைச்சர் டொனால் ரம்ஸ்பெல்ட் எச்சரித்துள்ளார்.

அவ்வாறு உதவி செய்யும் ஈராக்கின் அண்டை நாடு எதுவானாலும், அந்நாடு அல- கெய்டா இயக்கத்துடன் தொடர்புடைய நாடு என்றே கருதவேண்டியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பெயர் குறிப்பிடாவிட்டாலும் சிரியா நாட்டினைக் குறிப்பிட்டே அமெரிக்கத் தற் காப்பு அமைச்சர் அவ்வாறு தெரிவித்துள்ளதாக கருதப்படுகிறது.

ஈராக்கில் வன்முறையில் ஈடுபட்டுவரும் தீவிரவாதிகள் சிரியாவில் இருந்து அனைத்து உதவிகளையும பெற்றுவருவதாக தொடர்ந்து குற்றஞ்சாட்டிவரும் அமெரிக்கா, தற்போது அல்-சர்காவி ஈராக் - சிரியா எல்லைப்பகுதி யில் இருப்பதாகவும் சந்தேகிக்கிறது. (ந)

## ஏப்.28 இலிருந்து இதுவரை

# குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 780 பேர் வரை உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பயங்கர குண்டுவெடிப்பில் 17 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். இச்சமபவத்தில் ஈராக் நகராட்சி ஆணையர் உட்பட உயர் அதிகாரிகளும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் மூன்று பச்சிளங்குழந்தை களும் பரிதாபகரமாக பலியாகினர்.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியிலிருந்து இதுவரை 780 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நேர்ந்த குண்டுவெடிப்பு ஒரு உணவகத்தைக் குறிவைத்து நடத்தப் பட்டது. மிகவும் பரபரப்பான உணவு இடை வேளையில் இச்சம்பவம் நிகழ்ந்ததால் உயிரி ழப்புகள் மேலும் அதிகரிக்கக்கூடுமென கூறப் படுகிறது.

இச்சம்பவம் நடந்தபோது ஈராக்கின் குர்திஷ் இன துணைப்பிரதமர் அங்கு உணவ ருந்திக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ந)

அன்பின் வழியது உயிர்நிலை அஃ திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு - குறள்

வலம்புரி

# எல்லா மதங்களும் சிந்திக்க வேண்டும்

திருகோணமலை நகர மையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை இந்தநாட்டில் பெரும்பிரளயத்தை ஏற்படுத்தும் அளவிற்கு நிலைமையை மோசமடையச்செய்துள்ளது.

சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் முயற்சி நடந்துகொண்டிருக்கும் வேளையில் புத்தர் சிலையைவைத்து புதிய் பிரச்சினையை ஏற்படுத்தியதை புத்தரே மன்னிக்கமாட்டார். மனிதனை வாழ்கைக்குரியவானவாக ஒழுங்கு படுத்துவதே சமயங்களின் கடமை. இதனை எந்தச்சமயங்கள் செய்யத் தவறுகின்றனவோ அவை மனித குலத்திற்கு அட்டமத்தானாக அமைந்துவிடும்.

மனிதன் ஒற்றுமையைக் குலைப்பதுவே சமயத்தின் பாணியாக இருக்குமாயின் சமயம் என்பது [illegible]வையற்றதாகி விடும். மொழியால் இனத்தால் வேறுபட்டாலும் 'மனிதம்'என்ற பெயரால் மனித குலத்தை ஒற்றுமைப்படுத்துவதே சமயங்களின் கடமையாகும்.

ஆனால், பௌத்தம் என்ற பெயரால் மனித ஒற்றுமையைக் குலைக்கும் கொடூரத்தனம் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் வேளையில் திருகோணமலை நகர மையத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளமை எதற்காக என்ற கேள்வியை இப்பத்தியில் ஏற்கனவே எழுப்பியிருந்தோம்.

அந்தக்கேள்விக்குரிய பதில் கிடைக்காத நிலையில் இப்போது திருமலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையைப்பாதுகாக்க இராணுவத்தைக்குவிக்க வேண்டியதேவை உள்ளது.

தேவையில்லாத ஓர் வேலையைச்செய்ததால் அது தேவையான எத்தனையோ வேலைகளை தவிடுபொடியாக்கும் நிலையை உருவாக்கிவிட்டது. புத்தர்சிலையை புதிதாகப் பிரதிஷ்டை செய்தமை, அதனால் இராணுவக்குவிப்பு, இதனைக்கண்டித்து வடக்கு கிழக்கில் பூரணஹர்த்தால் இப்படியே நிலைமை இறுக்கமடைகின்றது.

தமிழ், சிங்களம் என்ற மொழிவாதப்பிரச்சினைக்கு அப்பால் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமியம் என்ற சமய பேதமை கலந்த பிரச்சினைகளும் முளைவிடும் ஆபத்தை புத்தர் சிலை உருவாக்கி விட்டது. ஒன்றை மறைப்பதற்கு இன்னொன்றை புதுப்பிப்பது .வேறுவிடயங்களுக்கு உகந்ததாக இருப்பினும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகும்.

எனவே, இதனை முதலில் அரச தரப்பும் பௌத்த மத பீடங்களும் புரிந்துகொள்ளவேண்டும். புத்தர் சிலையை தமிழர் தாயகப்பகுதில் புதிதாக அமைப்பதன் மூலம் இலங்கை முழுவதிலும் பௌத்தம் பரவியிருந்தது என்ற வரலாற்றை எழுதுவதில் சிங்களப்பேரினவாதிகளுக்கு அலாதிப்பிரியம்.

காலகாலமாக திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட வரலாற்றுத்திரிபுகள் தந்த வினையே இன யுத்தமாகும். இதனை காலம் கடந்தேனும் சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த பீடத்தினரும் உணர்ந்து கொள்வது எழுதப்பட்ட வரலாற்றை பாதுகாப்பதற்கான வழியாக இருக்கும்.

மகாவம்சம் பேசுவதை வைத்துக்கொண்டு எல்லா மக்களையும் நோக்குவது மகாவம்சத்திற்கே ஆபத்தாகிவிடும். அடக்கப்பட்ட ஓர் இனம்தொடர்ந்தும் அடங்கிவாழ்ந்தாக வரலாறு இல்லை. எல்லா மக்களும் சமத்துவ உரிமைபெற்று வாழவேண்டும். எல்லாச் சமயங்களும் மக்களுக்கானவை. அது பெரிது இது பெரிது என்ற பேதமை தேவையற்றது.

இந்த உயர்ந்த கொள்கை இலங்கை அரசில் பின்பற்றப்படுகின்ற போதுதான் இன ஒற்றுமை உருவாகும். இதனை அரசு மட்டுமல்ல இலங்கையில் மத்மாற்றங்களில் முனைப்புடன் ஈடுபட்டுள்ள குறிப்பி[illegible]த்தக்க சில அமைப்புகளும் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று புத்தர் சிலை, நாளை இன்னோர்சிலை ஒற்றுமையை குலைப்பதாக அமைவதைத்தடுக்க முதலில் மதமாற்றத்தடைகள் அவசரமாக அமுலுக்கு வரவேண்டும்.

## 48 இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் 5 ஊடகவியலாளர்களும் கொலை;

# பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது நாட்டின் தேசிய பாதுகாப்பு- திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஆட்சியில் நாட்டின் தேசிய பாதுகாப்புப் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதுடன் நாடு மீண்டும் யுத்தத்துக்குத் தள்ளப்படும் அபாயமும் தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்மாநாட்டில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்பு வீழ்ச்சி கண்டுள்ளது என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுனரின் கொலை தொடர்பாகவும் புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற மூன்று தரப்பினரும் கடுமையாக அன்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை விமர்சித்தனர்.

எனினும், 2003ம் ஆண்டு முதல் இந்த நாட்டில் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவும் முப்படைத் தளபதியாகவும் இருக்கின்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் அதாவது தற்போது 2003 நவம்பர் முதல் இன்று வரை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 48 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதைவிட 5 ஊடகவியலாளர்களும் கொலை செய்யப்பட்டுள் ளனர்.

தற்போது தேசியப் பாதுகாப்பு எங்கு உள்ளது? ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது தேசியப் பாதுகாப்புக் குறித்து கேள்வி எழுப்பிய ஜே.வி.பி,சுதந்திரக் கட்சி என்பன தற்போது என்ன செய்கின்றனர்?

இந்த நிலையில் நாடு மீண்டும் யுத்தத்துக்கு செல்லும் சூழல் ஏற்படுமாயின் அதற்குத் தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கமே முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ற-8)

# அரச ஊழியருக்கான காப்புறுதித்திட்டம்;

* மருத்துவக் காப்புறுதி -ரூ. 3,50,000 * திடீர் விபத்து, இயற்கை மரணம்-ரூ. 6,00,000

(கொழும்பு)

கடந்த் வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் முன்மொழிந்த காப்புறுதித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதற்கான சுற்றுநிருபம் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைச் செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாண அரச சேவையில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் பங்களிப்புச் செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊழியரும் மாதாந்தம் 75ரூபா தவணைக் கொடுப்பனவாக செலுத்த வேண்டும். ஊழியர் ஒருவரின் சார்பில் அரசாங்கம் 69 ரூபாவை வழங்குகிறது. இந்தக் காப்புறுதித் திட்டம் திடீர் விபத்துக்கள், இயற்கை மரணம், கடன் ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

சம்பவம் நடந்து 10 நாட்களுக்குள் காப்பீடு செய்து கொண்டோருக்குக் கொடுப்பனவு வழங்கப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

காப்புறுதித் திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ரி. திஸநாயக்க இந்த விடயங்களைக் கூறினார்.

முன்னைய அக்ரகாரக் காப்புறுதித் திட்டத்திற்குப் பதிலாக புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் மருத்துவக் காப்பீட்டில் ஆகக் கூடுதலாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலான உச்சக்கடன் தொகையும் திடீர் விபத்து, இயற்கை மரணக் காப்பீட்டில் ஆகக்கூடுதலாக 6 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கடன், காப்புறுதியின் கீழ் அரச ஊழியர் ஒருவர் ஆகக் கூடிய 6 இலட்சம் ரூபாவைப் பிணையாக வைக்கமுடியும். (ற-2)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிக வீடுகள் கையளிப்பு

நோர்வே அரசின் நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக், கழகம் மிக மோசமான அனர்த்தத்திற்குள்ளான கிண்ணியாப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கூவா நகரில் 250 தற்காலிக வீடுகளைக் கொண்ட திட்டமிடப்பட்ட மாதிரிக் குடியிருப்பை அமைத்து புதன்கிழமை மக்களிடம் கையளித்தது.

திருகோணமலை மாவட்ட திட்ட அலுவலர் திரு.கலைவர்ணன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கமும், முஸ்லிம் சமய வாழ்த்துப்பாட்லான 'கிராத்'தும் ஓதப்பட்டன. வீட்டுத்திட்டத்திற்கான பெயர்ப் பலகையினை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார். இதனைத்தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி வீடுகள் திறந்து வைக்கப்பட்டன. இதனைக் கிண்ணியாப் பொலிஸ் பொறுப்பதிகாரி.சேனநாயக்கா உட்பட சிலர் திறந்துவைத்தனர்.

இதனையடுத்து, அங்கு கூடியிருந்த மூவின சமூகத்தவர்களாலும் இப்பணி தொடர்பாக நன்றியும், மனநிறைவும் கலந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கிண்ணியா உலமாசபைத் தலைவர் ஜனாப் ஏ.ஆர்.மசார் மௌலவி உரையாற்றுகையில்,

கிண்ணியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சேவை புரிவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், உரிய காலத்தில் இத் தற்காலிக வீடுகளை அமைத்ததற்காகத் தாம் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.



திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தனது கருத்துரையில்,

தமிழ் புனர்வாழ்வுக் கழகம் கிண்ணியாவில் அமைத்த இத்தற்காலிக வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை தருவதுடன் தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவையும், இணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்.

தொடர்ந்து வீட்டைப்பெற்ற 250 குடும்பங்களுக்கும் தலா 1000 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா வைத்திய அதிகாரி ஜனாப் சமீம், கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியின்பன், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் விஜயகுமார், கிராம அலுவலர் ஜனாப் கனிபா, கிண்ணியா உலமாசபை செயலாளர் ஜனாப்ஹ தியத்துல்லா, தமிழர் புனர்வாழ்வுக்கழக நெறியாளர் சபை உறுப்பினர் ஜனாப் சாகுல்ஹமீது கிண்ணியா உலமாசபைத் தலைவர் ஜனாப் ஏ.ஆர்.மசார் உட்பட அரச பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள்,பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ற)

# பொதுக்கட்டமைப்பு பற்றி விளக்கம் தேவை சு.கட்சியினர் பொதுச் செயலாளருக்கு கடிதம்

உத்தேச பொதுக்கட்டமைப்பானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் கடும் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்துகிற முக்கிய விடயமாக மாறியுள்ளதாக அக்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்குக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களோ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களோ பொதுக் கட்டமைப்பை பற்றி எதுவும் அறியாதிருப்பதால் அதுபற்றி பொது மக்களுக்கு தெளிவான விளக்கங்களை அளிக்க முடியாதிருப்பதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பியிருக்கும் கடிதங்களில் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தையும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தையும் விரைவாகக் கூட்டி உத்தேச பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு போதிய விளக்கத்தை ஜனாதிபதி அளிக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (து-4)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

சொல்லால் விளக்க முடியாத விபரிக்க முடியாத அன்பின் சாரமாக இருப்பவன் இறைவன். இதை உணர முடியுமே தவிர விளக்க முடியாது. நாம் விலகியிருக்கும் அளவிற்கு இறைவன் நம்முள் வருகிறான். சிறிய "நான்" என்பதை விட்டுவிடு பெரிய "நான்" மட்டும் வாழ இடம்கொடு.

சுவாமி விவேகானந்தர்

# பிந்துனுவெவ படுகொலை; புதிதாக விசாரணை நடத்துமாறு மனிதவுரிமை ஆணையம் வலியுறுத்து

(கொழும்பு)

பிந்துனுவெவ படுகொலை தொடர்பான வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 4பேரை நிரபராதிகள் என்று உயர்நீதிமன்றம் விடுதலைசெய்தமைக்கு ஆசிய மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியவை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இவ் மனித உரிமை அமைப்பு புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் கையளித்துள்ள அறிக்கையில் மே 27 2005ல் வழங்கப்பட்ட தீர்பை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கை அரசிடம் வேண்டுவதாக ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுதந்திர நீதிபதிகள், சட்டத்தரணிகள் உள்ளடங்கிய விசேட குழுவினரை இலங்கைக்கு அழைக்குமாறும் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிந்துவெல படுகொலை பற்றி கவனிக்குமாறு மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகரையும் இவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் பற்றி ஆலோசிப்பதற்கு உயர்மட்ட நீதிமன்ற நீதிபதிகள் குழுவினரை நியமிக்குமாறும் அவ்வமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை 'நீதிக்குப்புறம்பான இலங்கை' என்னும் தலைப்பில் மனிதஉரிமைகளுக்கான ஆசிய நிலையப்பணிப்பாளர் சுகாஸ் சக்மா வெளியிட்டுள்ள 24 பக்க அறிக்கையில் பிந்துனுவெவவில் அரசின் பாதுகாப்பில் இருந்த 28தமிழர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு எந்தவொரு தனிமனிதரும் பொறுப்பல்ல என்ற தீர்ப்பானது தமிழர் இடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே 27அன்று பிந்துனுவெவ படுகொலைகளில் சம்பந்தப்பட்ட ஏற்கனவே மரணதண்டனை வழங்கப்பட்டவர்களை விடுதலைசெய்திருந்தது நீதிமன்றம். அப்பாவி தமிழர்களின் படுகொலைசெய்யப்பட்ட விடயத்தில் இலங்கை அரசாங்கம் தண்டனையை உரியவர்களுக்கு வழங்காமல் தவறி விட்டது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற.04,06)

## பொதுக்கட்டமைப்பிற்கு...

அக்கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல இன மக்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு சுனாமிக்குப்பிந்திய முகாமைத்துவ நடவடிக்கை கட்டமைப்பு (POST TSUNAMI OPERATIONAL MANAGEMENT STRUCTURE) ஒன்றை உருவாக்குவதற்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளின் இன்றைய நிலை பற்றி ஜனாதிபதி எடுத்துக்கூறினார். சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமாதானத்தீர்வு ஒன்றை ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் ஆதரவு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிரந்தர அரசியல் தீர்வுக்கான சமாதானப்பேச்சுக்கள் தாமதியாது தொடங்கப்படவேண்டுமென இரு தலைவர்களும் வலியுறுத்தினர். அத்தீர்வு இலங்கையின் ஐக்கியத்தையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பேணுவதுடன் சகலரினதும் அடிப்படை உரிமைகளையும் உத்தரவாதம் செய்யவேண்டும்.

போர்நிறுத்த மீறல்பற்றி இந்தியா தனது கவலையை வெளியிட்டுள்ளது. குறிப்பாக விடுதலைப் புலிகளிடம் உள்ள விமானங்கள் குறித்து இந்தியாவினால் கவலை தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்பு இறைமை பிராந்திய ஒருமைப்பாட்டில் இந்தியா கரிசனைகொண்டிருக்குமென கூறப்பட்டுள்ளது.

சேதுசமுத்திரத்திட்ட விடயத்தில் இருநாட்டு வல்லுநர்களின் கருத்துப்பரிமாறல்களும் தொடர்ந்து இடம்பெறும். சூழல்விவகாரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும.

ஐக்கிய நாடுகள் சபை பயங்கரவாதத்தை ஒழித்தல், சார்க் பிராந்திய ஒத்துழைப்பு ஆகிய விடயங்களின் உரையாடல் சுமுகமாக நடந்துள்ளன.

இந்தியப்பிரதமரின் வருகையை எதிர்பார்ப்பதாக இலங்கை ஜனாதிபதி கூறினார். இதனை ஏற்றுக்கொண்ட இந்தியப்பிரதமர் இலங்கை-இந்திய உறவுகள் மென்மேலும் வலுவடையும் என எதிர் பார்ப்பதாக தெரிவித்தார்.

மேலும் சுனாமி அனர்த்தம் தொடர்பில் இந்தியா வழங்கிய மற்றும் வழங்க உறுதியளித்துள்ள உதவிகளுக்கு இலங்கை ஜனாதிபதி நன்றிதெரிவித்தார். சுனாமி மீள்கட்டமைப்பு தொடர்பாக இந்தியா நூறு கோடி ரூபாவையும் மூன்று ஆண்டுகளுக்கான கடன் மீள் அளிப்பு சலுகைகளையும் வேறும் வகை உதவிகளையும் வழங்கும் என அக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ச,6,4)

## இலங்கை...

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு புதுடில்லியில் தங்கியிருக்கும் ஜனாதிபதிசந்திரிகாகுமாரதுங்கவிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் ஆகாயப் பாதுகாப்புத் திட்டம் உட்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்திய அரசினால் பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக கொழும்பில் இருந்து சிரேஷ்ட - பாதுகாப்பு படை அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றினை புதுடில்லிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விமானங்கள் இருப்பதாக வெளியான செய்திகள் தமக்கு கவலையளிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-04)

## ஜே.வி.பியினரை...

பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இந்தியாவின் இணக்கம் கிடைக்காதபட்சத்தில் அதில் கையொப்பமிடுவது குறித்து மீண்டும் ஒரு தடவை கூறி ஆராய்ந்த பின்னரே முடிவு எடுக்கப்படும் என அவர் கூறினார்.இதேவேளை பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-04)

## காங்கிரஸ்...

பெற்றோலியத்துறையுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதேவேளை ஜனாதிபதி நேற்று முன்தினம் பிரதம மந்திரி மன்மோகன்சிங்கை சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ச-08)

## அதிரடிப்...

சம்பவத்தையடுத்து அருகிலுள்ள விசேட அதிரடிப் படை முகாமிலிருந்து விரைந்தபடையினர் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததாகவும் அப்போது அந்தவழியாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்து நடராஜா என்பவரும் அவரது மகனாக விஜய் என்பவரும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ச-04)

## தம்பிலுவில்...

ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறியே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அங்கு அப்படி எந்த ஆயுதமும் கைப்பற்றப் படவில்லை என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை திருக்கோயில் பொலிஸ் தரப்பும் உறுதிப்படுத்தியது. தமது அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ச)

## நேற்றைய ஹர்த்தாலினால்...

இராணுவத்தினரின் காவ லரண்களை மக்கள் தாக்க முற்பட்ட வேளையிலேயே முறுகல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் வல்வெட்டித்துறையிலுள்ள காவலரணுக்கும் மக்கள் தீ வைக்க முற்பட்டவேளை அங்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. இது இவ்வாறு இருக்க பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த சரக்குக் கப்பலும் திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் எதுவும் இயங்கவில்லை.

போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாமையினால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனுராதபுரச் சந்தியில் இருக்கும் சந்தைக் கட்டடத்தின் மீது நேற்றுக் காலை 10.10 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை சீனன்குடா சீமெந்துத் தொழிற்சாலைக்கு நேற்று குண்டெறிய முற்பட்ட இருவர் மீது விமானப் படையினர் சுட்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீமெந்து தொழிற்சாலையில் நின்ற காவலாளிகளை அங்கிருந்து வெளியேறுமாறும் இல்லாவிடில் கைக்குண்டுகளை எறிந்து விடுவதாகவும் எச்சரித்தனர். அவ்வேளை அங்கு வந்த விமானப் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

பாலயூற்றுப் பகுதியை சேர்ந்த ரவி, சத்தியசீலன் என்ற இருவருமே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர். இது இவ்வாறிருக்க வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை ஆகியபிரதேசங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் காரணமாக நகரப் பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். ஆங்காங்கே வீதிகள் எங்கும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. மரக்குற்றிகள் போடப்பட்டு வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டன. இதனால் உள்ளூர் வெளியூர் போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தது. சில இடங்களில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டன. (ச-19-43-04-08-52)


ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்
(வரையறுக்கப்பட்டது)

HATTON NATIONAL BANK LIMITED HNB

அடகுப்பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு

நீங்கள் பெற்றுள்ள அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறு பக்கத்திலீ குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகுவைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்திற்குள் கடன்செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுபபகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒருபகுதியையும் செலுத்தி கடனின் காலவதித் திகதியினை நீடித்துக்கொள்ளலாம்.

ஒருவருடகாலத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/காலாவதித்திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப்பொருள்கள் 18.06.2005 சனிக்கிழமை ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகிறோம்.

அறிமுகம் HNB 5 வருட நிலையான வைப்புகளுக்கு கூடுதலான வட்டி வீதம் 10.5% வட்டி மாதாந்தம், 3 மாதம், 6 மாதம், வருடாந்தம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பல அனுகூலங்கள் விபரங்களிற்கு அருகில் உள்ள கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(C-1421) முகாமையாளர்.



திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள்
☆ சுற்றுலாக்கள்



போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467





27.03.2005 அன்று இறையடி சேர்ந்த

மண்டைதீவு

சிவஸ்ரீ ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்கள்

அவர்களின்

ஆத்மசாந்தி பிரார்த்தனைக் கூட்டம்

இடம்:- நாவலர் கலாசார மண்டபம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
காலம்:- 04.06.2005 இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி

ஆத்மசாந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திருமுறைக்கழகம் மண்டைதீவு.



மனோகரா யாழ்




கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும்

கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த




கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.